

# அன்புள்ள மான்விழியே...

## பாலகுமாரன்



## 1

வெளியே மெல்ல விடிந்து கொண்டிருந்தது.

உள்ளே அக்கா இறந்து கொண்டிருந்தாள்.

மேல்மூச்சு வாங்குவது அதிகமாயிற்று. சுவாசம் விடுவது ஒரு துருத்தி போல் நடந்தது. வலியினாலோ அல்லது வேறேதும் கோப நினைப்புகளினாலோ அக்கா உதட்டை பற்களால் கடித்துக் கொண்டாள். கைகளை உடம்போடு அழுத்திக் கொண்டாள். அவள் உடம்பில் ஒரு உதறல் ஏற்பட்டு அடங்கியது.

அந்த உதறலுக்குப் பிறகு சுவாசம் சற்று அமைதியாகியது.

அக்கா சொர்ணலக்ஷ்மியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரேசன் மறுபடியும் திருவாசகம் படிக்கத் துவங்கினார்.

எப்பொழுதெல்லாம் மனதில வேதனை வருகிறதோ

அப்பொழுதெல்லாம் மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப் படிப்பது சுந்தரேசனின் இயல்புகளில் ஒன்று.

சுந்தரேசன் திருவாசகத்தைப் பிரித்தார். "நீத்தல் விண்ணப்பம்" என்கின்ற பகுதி வந்தது. அவருக்கு பிடித்த பகுதி அது. அகங்காரத்தை நீக்கி தன்னை இறைவனோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கெஞ்சுகிற பகுதி அது. என்னை கைவிட்டு விடாதே என்று பதறுகிற பதிகம் அது.

சுந்தரேசன் அக்காவிற்காக படிக்க ஆரம்பித்தார். தன்னை தம் தமக்கையாக நினைத்துக் கொண்டு அவள் இறைவனிடம் கெஞ்சுவது போலவே பதிகத்தை படிக்கத் துவங்கினார். சொர்ணலக்ஷ்மியால் கெஞ்ச முடியாது. அமைதியாய் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யத் தெரியாது.

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து
  நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்
  வியன் மூவுலகுக்கு
ஒரு தலைவா மன்னும் உத்தர
  கோசமங்கைக்கு அரசே
பொரு தலை மூவிலைவேல்
  வலன் ஏந்திப் பொலிபவனே.

நல்லதிற்கும், கெட்டதிற்கும் நடுவே மனம் ஊசலாடுதலை மாணிக்கவாசகர் இருதலைக் கொள்ளி எறும்பு என்று சொல்கிறார். ஆனால் அக்கா நல்லவளாக இருந்தாலும் புருஷனுக்கும், பிள்ளைகளுக்கும் நடுவே ஊசலாடினாள்.

மிக மோசமான புருஷனுக்கும் மிக அற்புதமான இரண்டு குழந்தைகளுக்கும் நடுவே திண்டாடினாள்.

"ச்சீ... போ நாயே..." என்று புருஷனை அவளால் உதற முடியவில்லை.



■

"பொண்ணு வச்சுண்டிருக்கேனே சுந்தரா. நாளைக்கு அதுக்கு கல்யாணம் ஆகும்போது அப்பா யாருன்னு கேட்பாளே"

■

பாலகுமாரன்

"பொண்ணு வச்சுண்டிருக்கேனே சுந்தரா. நாளைக்கு அதுக்கு கல்யாணம் ஆகும்போது அப்பா யாருன்னு கேட்பாளே. உதறிட்டு வந்தா என் ஒண்ணா இல்லைன்னு கேட்பாளே. ஒரு பொண்ணா இருந்தாக் கூடப் பரவாயில்லை. ஒண்ணுக்கு ரெண்டு பொண்கள். ரெண்டுமே படிப்புல மகா கெட்டி. ரொம்ப சமத்து. சமையலோ, வீட்டு வேலையோ அற்புதமாப் பண்ணுதுகள்.

தங்களுக்கு அப்பா சரியா அமையலயேங்கறது தெரிஞ்சு நான் வேதனைப்படறேன்னு புரிஞ்சு, என்னை தாங்கறதுகள். இதுகள் தாங்கறதாலேயே நான் இவரை உதறுவதைப் பத்தி இன்னும் யோசிக்கறேன்."

இப்ப சரியாயிடும், அப்ப சரியாயிடும்னு இருபது வருஷம் ஆச்சு. நீ என்ன சொல்றே. நான் டைவர்ஸ் பண்ணட்டுமா... வேண்டாமா..." அக்கா போன மாதம் கூடக் கேட்டாள். இருதலைக் கொள்ளி போல தவித்தாள்.

வெள்ளத்துள் நா வற்றியாங்கு உன்
அருள் பெற்றுத் துன்பத்து இன்னும்
விள்ளக்கிலேனே விடுதி கண்டாய்
விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளத்து உளேற்கு அருளாய்
களியாத களி எனக்கே.

அக்காவைச் சுற்றி அன்பு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அக்கா அழகி, குணவதி, சந்தரேசனும், சந்தரேசனின் குடும்பமும், அக்காவின் குழந்தைகளும் அவள் அன்பில் திக்குமுக்காடி அவளுக்கு அன்பு செய்தார்கள்.

அண்டை அயலும், சிநேகிதர்களும் அவளைக் கொண்டாடினார்கள்.

இந்த அன்பு வெள்ளத்தில் சிக்கி ஆனந்திக்க வேண்டிய அக்கா, புருஷனுக்கு பயந்து எவர் அன்பையும் ஏற்க முடியாமல் வறண்டு கிடந்தாள். அக்கா புருஷன் வைத்தியலிங்கம் ஒரு குடிகாரன். மிகப் பெரிய கர்வி. தனது சிறிய கணித அறிவை, பேச்சு சாமர்த்தியத்தை மிகப்பெரிய ஞானம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அதுபற்றியே அவன் அலட்டிக் கொண்டிருந்தான்.

அவன், அறிவும், கர்வமும் அவனிடத்தில் அயோக்கியத் தனத்தை வளர்த்தன. மற்றவர்களிடம் காசு பறிப்பது, பொய் சொல்லி ஏமாற்றுவது அவனது வாழ்க்கையாக இருந்தது.

ஒரு வியாபாரம் எப்படி செய்ய வேண்டுமென்று அவனால் விளக்க உரை செய்ய முடியும், பத்து பேருக்கு சொல்லித் தாமுடியும். ஆனால், அவனால் நடத்த முடியாது.

அக்காவின் புருஷன் உழைப்பில்லாதவன், உல்லாசி, உண்மையில்லாதவன, சோம்பேறி பத்து நிமிடம் பேசினால் அவனோரு அருவருப்பான 'ஜந்து' என்பது புரிந்துவிடும்.

அவன் தோல்வியின் விரக்திகளை, அதனால் ஏற்பட்ட பயத்தை, பயத்தினால் ஏற்பட்ட பதட்டத்தை மனைவியிடம் காட்டினான்.

மனைவி நல்லது சொல்லும் போதெல்லாம் அவளை அடித்து உதைத்தான். இழிவுப்படுத்தினான். அவளை வேறு யாரும் பாராட்டினாலும் பொறாமைப்பட்டான். ஒரு



வக்கிரம் பிடித்த மிருகமாக வாழ்ந்து வந்தான்.

"சார்... உங்க மனைவி சொர்ண லக்ஷ்மி வீட்டுல இருக்காங்களா...?"

"என் என்ன விஷயம்?"

"நன்றி சொல்லணும் சார்."

"எங்கிட்ட சொல்லுங்கோ. எதுக்கு நன்றி?"

"என் பொண்ணு கல்யாணத்துக்கு நிறைய உதவி பண்ணினாங்க சார். பட்சணம் பண்ணி, நலுங்கிட்டு, சத்திரத்துக்கும் வீட்டுக்கும் சாமான்களை மாத்தி, ஒரு ஸ்பூன் கூட திருட்டுப் போகாம காவல் காத்து ஏகப்பட்ட ஹெல்ப் பண்ணினாங்க சார்."

"செய்ய வேண்டியதுதானே அவளுக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும் சார். அதுக்கு காரணமிருக்கு அவ உங்க மாதிரி ஒருத்தரை லவ் பண்ணிட்டிருந்தா இப்ப இல்லை, கல்யாணத்துக்கு முன்ன. அவா வீட்டுல பிரிச்சு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சுட்டா. பாவம் தலையெழுத்தேன்னு எனக்கு கழுத்து நீட்டினா. நீங்கக் கொஞ்சம் அவ பழைய லவ்வர் மாதிரி இருக்கேளா... அதனாலேயே ஒரு கிக்குல உதவி செஞ்சிருக்கா.

"இதுக்கு நீங்க நன்றி சொல்ல வேண்டாம். சொல்றதா இருந்தா

■

**"அவ உங்க மாதிரி ஒருத்தரை லவ் பண்ணிட்டிருந்தா இப்ப இல்லை, கல்யாணத் துக்கு முன்ன. அவா வீட்டுல பிரிச்சு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சுட்டா."**

■

பாலகுமாரன்

என் பொண்டாட்டியோட பழைய லவ்வருக்குத்தான் நன்றி சொல்லணும்."

வந்தவர் முகம் வெளிர வெளியேறுவர். சொர்ண லக்ஷ்மியின் புருஷன் வாய்விட்டு சிரிப்பான். சொர்ண லக்ஷ்மி ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டாள், அடிப்பான்.

சுந்தரேசன் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க பல வழிகளில் முயன்றார். அவனிடம் நயமாகப் பேசினார். பளார் என்று கன்னத்தில் அறைந்து பயமுறுத்தினார். ஒரு முறை நடுத்தெருவில் ஓட ஓடத் துரத்தி, கட்டையால் அடித்து முடமாக்கினார்.

அவன் அழுவான். மன்னிப்புக் கேட்பான். மறுபடி ஆடுவான். முட்ட முட்ட குடித்து தெருவில் படுத்துக் கிடப்பான்.

"உங்க தம்பிக்கிட்ட சொல்லாதடி" என்று அவளை நோக்கி கைகூப்புவான். குழந்தைகளை நோக்கி கைகுவிப்பான். எல்லாம் பொய். அவன் யாரிடமும் உண்மை பேசியதே இல்லை. எந்த நிலையிலும் அமைதியாக நடந்து கொண்டதில்லை.

போன வாரம் கூட ஏதோ சண்டை. மனைவியை அரிவாளால் தாக்க முயல, அவள் பயந்து போய் வெளியே ஓடத் தெருவில் வந்த மோட்டார் சைக்கிள் இடித்து அவளைத் தூக்கி அப்புறம் எறிந்திருக்கிறது. தலையில், முகத்தில், இடுப்பில், புறங்கையில் எல்லாம் பலத்த காயம்.

வண்டி ஓட்டியவனும் நிலை குலைந்துவிட அவனுக்கும் காயங்கள். அக்கா உடனடியாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். ஒவ்வொரு நாளும் அவள் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. வண்டி ஓட்டிய இளைஞன் பிழைத்துக் கொண்டான். இருபது வயதுப் பெண் சௌதாமினியும், பதினெழு வயதுப் பெண் மரகதமணியும் நடந்ததை அப்படியே சுந்தரேசனிடம் சொல்ல, சுந்தரேசன் அப்படியே போலீசில் சொன்னார்.



சொர்ணலக்ஷ்மி போலீசிடம் தன் புருஷனை நிச்சயம் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்று சுந்தரேசனுக்குத் தெரியும். அதனால் அவர்களை சாதாரண உடையில் வரச் சொல்லி இன்ஷூரன்ஸ் அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்தி வாக்குமூலம் வாங்கிக் கொண்டாயிற்று.

அக்காளின் புருஷன் முட்டாள் தனமாய் ஓடி ஒளிந்துக் கொண்டான். இது அவன் குற்றத்தை பெரிதுபடுத்திக் காட்டியது.

"எங்க சார் பூடுவாரு... ஆனைப்பட்ட கிரிமினல்களையே நாங்க மடக்கிக் கொண்டு வந்துர்றோம். இந்த ஆளு எலியா கெடைப்பான் சார். தானா வந்து மாட்டுவான். இந்த ஏரியா பெண் போலீசுக்கு இன்னொரு புகாரு கொடுங்க. நீங்க ஒரு மனு. ரெண்டு பொண்ணுங்களும் ஒரு மனு கொடுக்கட்டும். இது எல்லாத்தையும் வச்சு அந்த சோம்பேறியைக் காணாத அடிச்சறலாம். வாக்குமூலம் மட்டுமில்லாத எதனா சேர்த்து வச்சக்குனா ஜட்ஜ் வெறுப்பாயிருவாரு. அஞ்சாறு வருஷம் உள்ளார உட்கார வச்சருவாங்க.

சுந்தரேசன் அண்டை வீட்டார்களிடமிருந்தும், தமக்கை புருஷன் நண்பர்களிடமிருந்தும் கூட புகார் மடல்களும், சாட்சிக் கடிதங்களும் வாங்கிக் கொடுத்தார்.

"என்ன மன்னிச்சுடு சுந்தரேசா..." சேலத்திலிருந்து அக்காள் புருஷன் போன் செய்ய. "உன்ன மன்னிச்சுட்டேன். வீட்டுக்கு வா. அவ நிலைமை மோசமா இருக்கு" என்று அழைத்தார்.

தன்னைக் கொலை செய்வேன் என்று போனில் மிரட்டியதாக போலீசிற்கு இரண்டாவது மனு கொடுத்தார். தனிப்பட்ட முறையில் அடியாட்களை வீட்டில் வைத்து அக்கா புருஷனுக்காக காத்திருந்தார்.

அவன் வந்ததும் வரவேற்று உள்ளே அமர வைத்து அவனைக் கண்மண் தெரியாமல் அடித்தார். செருப்பால் விளாசினார். அவனை வெளியே ஓட விட்டார். ஆட்களை பின்தொடர விட்டார். போலீசிற்கு போன்

செய்தார்.

அவர் ஆட்கள் அவன் இருப்பிடத்தைத் தெரிவிக்க அவர் போலீசிற்கு தெரிவித்தார்.

"போலீசெல்லாம் தேடி வருதாம். ஓடிடு... ஓடிடு" அவர் ஆட்கள் அவனை சுவர்மீது ஏற வைத்தார்கள். அங்கிருந்து அவனை குப்புறத் தள்ளினார்கள். காணாமல் போனார்கள்.

சுவரேறி தப்பிக்க முயன்றபோது, அவனுக்கு அடிபட்டதாக போலீஸ் எழுதிக் கொண்டு போய் உள்ளே வைத்து மறுபடியும் அடித்தது.

அக்காளின் நிலைமை மோசமாக சந்தரேசன் அவனை மறந்துவிட்டு, திருவாசகத்தோடு அக்காளின் அருகே அமர்ந்து படித்தார்.

என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி
நின்று எய்த்து அலைந்தேன்
பின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மண்ணும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்
என் அரும்பொருளே

படிக்கும் போது கண்களில் நீர்ப் பெருகியது. அக்காவை எதுவும் காப்பாற்றவில்லை. காப்பாற்றுகிறேன் பயப்படாதே என்று யாரும் அவளுக்கு உறுதி கொடுக்கவில்லை. அக்கா இதோ மரணம் அடையப் போகிறாள்.

இரண்டு பெண் குழந்தைகளை விட்டுவிட்டு மரணமடையப் போகிறாள். எந்த சந்தோஷமும் இல்லாமல் சாகப் போகிறாள்.

"சிவனே... நீ அவள் வாழ்க்கையை விட்டு விட்டாய். அவளைக் கைத்தூக்கி காப்பாற்றாமல் போய் விட்டாய். சரி



அது உன் விருப்பம். அது வினை. தயவு செய்து அவள் மரண நேரத்தில் அவளை எமனிடம் விட்டு விடாதே. பாழ் நரகத்தில் தள்ளி விடாதே. அவளை உன்னோடு அழைத்துப் போ. உன்னருகே வைத்துக்கொள்.

இந்த ஒரு உதவியாவது என் தமக்கைக்காகச் செய்" கண் மூடி மனம் உருக வேண்டினார்.

யாரோ அவரைத் தொடுவது போல் தெரிந்தது.

கண் விழித்தார் தமக்கை கண் விழித்து அவர் கையைத் தொட்டுக் கொண்டிருந்தாள்.

"என்ன சொர்ணலக்ஷ்மி..." அவர் பதறி எழுந்தார்.

"நான் போயிட்டு வரேன்."

"எங்கே?"

"மேலே" அவள் கை காட்டினாள்.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாதம்மா... நீ சௌக்கியமா திரும்பி வீட்டுக்கு வருவே"

"இல்லை. அதெல்லாம் நடக்காது. என்னை வான்னு சொல்லிட்டா. நான் கிளம்பணும். சௌதாமினி எங்கே? மரகதமணி எங்கே? நான் பார்க்கணும்..."

ஆஸ்பத்திரி வராண்டாவிலிருந்த குழந்தைகள் பதறி அடித்துக் கொண்டு உள்ளே ஓடி வந்தார்கள். ஆளுக்கொரு பக்கமாய் வந்து அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டு அழுதார்கள். "உனக்கு சரியாயிருச்சுமா, நீ கண் திறந்திட்டே உனக்கு உடம்பு நல்லாயிரும்." சந்தோஷத்தில் பிதற்றினார்கள்.

"ரெண்டு பேரும் சமத்தா இருக்கணும். ஒரு சின்ன விஷயத்துல கூட உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல மனஸ்தாபம் வரக்கூடாது.

உங்களுக்கு அப்பா அம்மா எல்லாமே இனி உங்க மாமா, சந்தரேசன் தான். அவர் சொல் பேச்சு கேட்டுண்டு வாழ்க்கையில ரொம்ப நன்னா வரணும்.

மாமா உங்களுக்கு கல்யாணம் பண்ணி வைப்பார். நாலு விதமா யோசனை பண்ணித்தான் செய்வார். அப்படி நல்லது பண்ணியும் வாழ்க்கை கெட்டுப் போச்சுன்னா பயப்பட வேண்டாம். 'ஆம்படையானைத் தூக்கிப் போட்டுட்டு சுதந்திரமா வாழக் கத்துக்கோ. என்னை மாதிரி அச்சப்பட்ட பிறவியா வாழ்ந்து அசிங்கப்படா தீங்கோ.

தைரியமா இரு. கம்பீரமா இரு. சுயமரியாதையோட இரு'' சௌதாமினியைப் பார்த்து கரகரத்த குரலில் கூறினாள். ''உனக்கும்தான் மரகதமணி'' என்று அவள் தலையிலும் கை வைத்தாள்.

இரண்டு குழந்தைகளையும் தழுவிக் கொண்டாள்.

''தம்பி, எத்தனை அழகான குழந்தைகள் எனக்கு. இதுகள விட்டுப் போறமேன்னுதான் வருத்தமா இருக்கு.''

''அம்மா நீ ஒண்ணும் சாகமாட்டே.., தேவையில்லாம பேசாதே.''

''இல்லைடீ, உத்தரவு வந்துடுத்து...''

''சும்மா இரும்மா, பேத்தாதே.''

''உனக்கு தெரியலைடீ...

உன் ஆயுசு முடியும்போது உன்ன கூட்டிண்டு போற துக்கு நான் வருவேன். அது இருக்கு இன்னொரு அம்பது வருஷம்.''

''அம்மா நீ சரியாயிட்டே'' மரகதமணி அழுகையோடு கத்தினாள்.

''இல்லைடீ... நான் செத்துப் போயிண்டிருக்கேன்.''

சொர்ணலக்ஷ்மி கண்களை மூடிக்கொண்டாள். மறுப டியும் உடம்பு ஒருமுறை உதறிப் போட்டது. நர்ஸ் அவர் களை விலக்கினாள்.

சொர்ணலக்ஷ்மியின் நாடியைப் பார்த்து விட்டு முகம் சுருக்கினாள்.

''அவங்களை ரொம்ப தொந்தரவு பண்ணாதீங்க.



வாசலாண்ட இருங்க.'' அதட்டிவிட்டுப் போனாள்.

அவள் போன சிறிது நேரத்தில் மறுபடியும் உதறிப் போட்டது. சொர்ணலக்ஷ்மி கண் திறந்தாள்.

''தம்பி... அந்த ரெண்டு குழந்தைகளையும் உன் தோள்ள இறக்கி வச்சிட்டுப் போறேன். உனக்கு சுமைதான். எனக்காக பொறுத்துக்கோ. உன்னால அதுகளுக்கு கல்யாணம் பண்ணி வைக்க முடியும்.

நீ திருவாசகம் படிச்சக்கிட்டு இருந்தபோது நான் சாமிகிட்ட மன்றாடினேன். சொந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதே சிரமம். இதுல ரெண்டு பொண்ணுகளை தம்பிகிட்டக் குடுக்கறேனே... அவன் சிரமப் படுவானேன்னு கெஞ்சினேன். ஒரு பொண்ணுக்கு உங்க தம்பி கல்யாணம் பண்ணி வைக்கட்டும். ரெண்டாவது பொண்ணுக்கு நான் பண்ணி வைக்கறேன்னு சாமி சொன்னார். இந்த ஜென்மத்துல பண்ணின எல்லா புண்ணியத்தையும் இதுக்காக தத்துப் பண்ணிட்டேன்.

சிவ பெருமானுக்கு ரொம்ப சந்தோஷம். உன் தம்பிக்கும் நான் உதவி பண்றேன் கவலைப்படாதேன்னாரு. நான் போயிட்டு வர்றேன் அம்பி. நீ சௌக்யமா இருப்பே.

அந்தக் கடன்காரன், அதான் எம் புருஷன்மேல கோபப்பட்டு உன் சக்தியை வீணடிக்க வேண்டாம். அவன ஸ்வாமி கவனிச்சுப்பார்.

அவன் வலது கடவாய் பல்லுல புற்றுநோய் வந்துடுத்து. என்னை பளார் பளார்னு எத்தனை தடவை அடிச்சிருக்கான். அதே மாதிரி வலி நிமிஷத்துக்கு நிமிஷம் படப்போறான். கண் வழியே சீழ் வடியப் போறது. பாட்டு கேட்டாக்கூட காது வலிக்கப் போறது. அவன் அனு பவிக்கப் போறான். அவனுக்கு எதுக்க நீ கத்தி எடுக்க வேண்டாம்.

நம்ம ராமுவுக்கு சௌதாமினியக் கல்யாணம் பண்ணி வைக்கறயா?''

**''என் புருஷன் சாமர்த்தியந் தான். என்ன பிரயோஜனம். வெறும் பொறுக்கி யால்ல இருக்கு அவங்க அப்பா கெட்டிக்காரத் தனத்தையும், பொறுக்கித் தனத்தையும் அவ கண்ணெ திருல பாத்தி ருக்கா. ராமு நல்லவன்னு அவளுக்குத் தெரியும்.''**

''ராமுவுக்கா. அவனு
க்கின்னும் சாமர்த்தியம் போதல
சொர்ணம்.''

''எல்லாம் வந்துரும். நீ க
ராத்தான் படிச்சே. ஒஹோன்
வந்துடலயா. இன்னைக்கி தேதி
கொடிகட்டி நிக்கலயா. அதுமா
வந்துருவான்.''

''உன் பொண்ணுக்கு பிடிக்
ணுமே.''

''பிடிக்கும்.

''ஆம்படையான் நல்லவ
இருந்தா போதும்கறது அவளுக்கு
தெரியும். என் புருஷன் சாமர்த்
யந்தான். என்ன பிரயோஜன
வெறும் பொறுக்கியால்ல இருக்
அவங்க அப்பா கெட்டிக்காரத் தன
த்தையும், பொறுக்கித்தனத்தையு
அவ கண்ணெதிருல பாத்திருக்க
ராமு நல்லவன்னு அவளுக்கு
தெரியும். அவ கல்யாண
பண்ணிப்பா. நீ பண்ணி வை
பண்ணி வைக்கறேன்னு எனக்
சத்தியம் பண்ணு.''

சுந்தரேசன் தயங்கினார்.

''யோசிக்காதே. பயப்படாதே. நீ
முயற்சி பண்ணு. உன் பின்னால
நான் நின்னு நடத்தி வைக்கறேன்.
நீ பண்றேன்னு சொன்னாத்தான்
என்னால சந்தோஷமா சாக
முடியும். நான் சந்தோஷமா
செத்தாத்தான் ஸ்வாமியப் பார்க்க
முடியும். ஸ்வாமியப் பார்த்தாத்தான்



பூமியில இருக்கவாளுக்கு உதவ முடியும்.

மரணப் பயத்துல உளறரேன்னு நினைக்கறயா?... இல்லை. நான் உளறலை. எனக்குத் தெளிஞ்சுடுத்து. நிறையப் பேரு என் பக்கத்துல வந்துட்டா. நான் நிச்சயம் அவாளோட போயித்தான் ஆகணும்.''

எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு'' அவள் செருமினாள். கண்கள் சில கணங்கள் நிலை குத்திவிட்டு மறுபடியும் அலைந்தன.

''அவா காத்துண்டிருக்கா. நான் போகணும். எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு.''

''நான் பண்ணித் தரேங்கா. ஆனா...''

''எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு. நீ முயற்சி பண்ணு. நான் முடிச்சு வைக்கறேன். எந்த கவலையுமில்லாம சத்தியம் பண்ணிக் கொடு.

உலகத்துல உள்ள நல்ல விஷயங்களை உயிரோட இருக்கவா மட்டுமே முடிச்சற முடியாது. செத்துப் போனவா மட்டுமே தூக்கி நிறுத்த முடியாது. இவா ரெண்டு பேரும் சேர்ந்துதான் நல்ல விஷயம் நடக்கறது.

அதனால சொல்றேன். பயப்படாத எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு.''

சுந்தரேசன் அக்காவின் வலக்கையை இடக்கையால் ஏந்திக் கொண்டார். தன் வலக்கையை அவள் வலக்கை மீது வைத்தார்.

உன் மகள் சௌதாமினியை, நமது தம்பியாகிய ராமச்சந்திரனுக்கு சாவ நிச்சயமாய் திருமணம் செய்து கொடுக்கறேன். இன்று முதலே அதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுகிறேன். இது சத்தியம். சர்வேஸ்வரன் மீது ஆணை. சர்வேஸ்வரன் நம்மை காக்கட்டும்.''

அக்காள் சொர்ணலக்ஷ்மி முகம் மலரச் சிரித்தாள். பெரிய நிம்மதி அவளுக்குள் படர்ந்தது.

''ரொம்ப சந்தோஷம். மறுபடியும் திருவாசகம் பாடேன். கொஞ்சம் சத்தமா பாடேன். என்னைக் கூட்டிண்டு போக

வந்தவா எல்லாம் ரொம்பக் கிட்ட வந்துட்டா. அவாளும் கேட்கட்டும். திருவாசகம் பாடேன். நம்ம அப்பா 'குழைத்த பத்து' அப்படின்னு அடிக்கடி பாடுவாளே.

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாலுக்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே

இப்போது எதிரே இருக்கிற இந்தப் படுக்கையில் சொர்ணலக்ஷ்மி என்கிற இந்த ஜீவனுக்கு வேண்டுவது என்ன... எதைக் குறித்து இந்தப் பிரார்த்தனை.

எழுந்து குதித்துப் பாட வேண்டும் என்றா... இவள் இல்லறம் சிறக்க வேண்டும் என்றா... இவள் இறப்பு மிருதுவாக வேண்டும் என்றா... விரைவாக வேண்டும் என்றா...

என்ன வேண்டுமென்று இறைவா, எனக்குத் தெரியாது. வேண்டத் தக்கது அறிவோய் நீ. எனக்கு என்ன வேண்டுமென்று உனக்குத் தெரியும். எனக்கு வேண்டியதை நிச்சயம் நீ தருவாய். இறைவா, எனக்கு உதவி செய். இதோ வேதனையுற்ற இந்தப் பெண்ணுக்கு உதவி செய்.''

சந்தரேசன் சிவனை நினைத்தபடி கைகூப்பி அக்காவைப் பார்த்தார். அக்காவின் சுவாசம் நிதானமாகியது. டாக்டர்களை அழைத்தார்.

ஆறேழு டாக்டர்கள் சூழ்ந்து கொண்டார்கள். நாடித் துடிப்பு இறங்குகிறது என்று அறிவித்தார்கள்.

வாசலில் இருந்த இரண்டு பெண் குழந்தைகளையும் அவர் அருகே அழைத்தார்.

''உங்கள் அம்மா இறந்து கொண்டிருக்கிறாள். பயமில்லாமல் நகர்ந்து கொண்டிருக்கிறாள். நம்மை விட்டு



மெல்லப் பிரிந்து கொண்டிருக்கிறாள்.

எனவே, இடைவிடாது இறைவன் நாமம் சொல்லுங்கள். அழுகையில்லாது பிரார்த்தனை செய்யுங்கள்.

அம்மா கடைசியாய் எந்த நேரமும் கண் விழித்துப் பார்க்கலாம். அப்போது அழுது கொண்டிருப்பதை விட அமைதியாய் இருப்பது நல்லது. அவளை வணங்கி ஆசீர்வாதம் பெறுவது நல்லது. அவளையும் கலவரப்படுத்தி நாமும் கலவரமடையாது இந்த விஷயத்தை அமைதியாய் எதிர்கொள்வது நம் எல்லோருக்கும் நல்லது.

அம்மா இறந்தபிறகு அழலாம். அதற்கு முன் அமைதியாக இருப்போம். அதிர வைக்காது இருப்போம்.''

டாக்டர்கள் நோயாளி நிலைமையைப் புரிந்து கொண்டு ஒருபக்கம் விலகி உறவினர்களுக்கு வழிவிட்டார்கள்.

அக்கா இந்தமுறை நிதானமாய் கண் திறந்தாள். சிரித்தாள்.

''ஏதியாச்சு. இடம் கிடைச்சுடுத்து. ரொம்ப தூரம் போகணும். எல்லாரும் நல்லவா. பயமே இல்லையாம். ரொம்பப் பிரியம். எல்லார்கிட்டயும் நல்லப் பேச்சு. தந்திரத்துக்கு அவசியமே இல்லை. தந்திரம் குழப்பம் தான். இப்ப குழப்பமே இல்லை. பரம நிம்மதி. இதுதான் முக்கியம். இதுதான் தேடினேன். அம்பி, நீ சௌக்கியமா இருப்பே. நீ எது தொட்டாலும் ஜெயம். எல்லா இடத்திலும் ஜெயம். தர்மத்தை விடாதே.

எது தர்மம்... உனக்கு நன்னா தெரியும். எது அதர்மம், மனசுக்குத் தெளிவாப் புரியும்.

இது ஒழுங்கா செய்தா செத்துப்போனவா கூடவே இருந்து ஹெல்ப் பண்ணுவா. இங்க ஜெயிச்சவன் எவனும் தானா ஜெயிக்கலை. அவனுக்குக் கூட இருந்தவா யாரோ, அவன் உறவுக்காரா யாரோ அவன் கூட நின்னு தூக்கி விடுவா. செத்துப் போய் அவனுக்கு உதவி பண்ணிருக்கா. சூட்சமமா கூட நிக்கறா. பூமில இருக்கறவா உழைப்பும்,

செத்துப் போனவா வழிகாட்டறும் தான் ஒருத்தனை உச்சிக்குக் கொண்டு போறது.

நான் உன் கூட இருப்பேன். நீ கரையேற வரைக்கும் உனக்கு நான் உதவி பண்ணுவேன். குழந்தைகளா, கிட்ட வாங்கோ'' தன் வலது கையால் அவர்கள் உடம்பு முழுவதும் தடவினாள்.

''அம்பி, வரேண்டா'' என்று சொன்னாள். கண்மூடினாள். பதிமூன்று முறை சுவாசம் வேகமாக வெளிவந்தது. சட்டென்று நின்று விட்டது.

குழந்தைகள் கதறத் துவங்கினார்கள். சுந்தரேசன் அவளைச் சுற்றி வந்து தன் தலையை அவள் காலில் பதிய வைத்தார். விக்கி விக்கி அழுதார். அழும்போதே அக்காவின் புருஷன் பற்றிக் கோபம் வந்தது. சௌதாமினியின் கல்யாணம் பற்றி கவலை வந்தது. தம்பி ராமச்சந்திரன் எங்கே என்ற தேடல் வந்தது.

சொர்ணலக்ஷ்மி இறந்து விட்டாள் என்று டாக்டர்கள் அறிவித்தனர்.



# அன்புள்ள மான்விழியே...



## 2

**ரா**மச்சந்திரனுக்கு எதிரே ஆறு ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். அந்த ஆறுபேரும் ஆறு விதமான கேள்விகளோடு உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஒரு கேள்விக்குக் கூட அவனால் பதில் சொல்ல முடியவில்லை. எல்லாவற்றிற்கும் அண்ணன் வருவார் சற்று காத்திருங்கள் என்று சொல்லும்படியாக நேர்ந்து விட்டது.

''யோவ், உங்க அண்ணன் எங்கய்யா.''

''எங்க சிஸ்டரைப் பார்க்க ஆஸ்பத்திரி போயிருக்கார் சார்.''

''எப்ப வருவார்?''

''தெரியாது.''

''என்ன உன் சிஸ்டருக்கு?''

''சீரியஸா இருக்காங்க சார்.''

"அப்ப வர்றது கஷ்டம் தானா?"

"தெரியலை சார்."

"கேட்டு சொல்லேன். சும்மா உட்கார்ந்துட்டிருக்கியே"

"என்னைத் தொந்தரவு பண்ணாதேன்னு சொல்லிட்டுப் போயிருக்கார் சார்."

"நானும் அதுக்குத்தான்யா கேட்கறேன். தொந்தர(வு) பண்ணலாமா, கூடாதான்னு நிலைமையைத் தெரிஞ்சு(க்)கத்தான் கேட்கறேன்."

"தம்பி, எந்த ஆஸ்பத்திரி. பேர் சொல்லு."

"சொல்ல வேணாம்னுருக்கார் சார்."

"அடச்சீ. சொல்லுடா."

"முடியாது சார். எங்கண்ணன் திட்டுவாரு."

"கடவுளே... ஏழவு கொடுறானே. அவர் வெளியே போ(ய்) யோசித்தார்.

அது ஒரு ஆட்டோமொபைல் கன்ஸல்டி(ங்) அலுவலகம். சந்தரேசன் சுயமாய் மெல்ல மெல்ல உருவாக்கிய கம்பெனி.

கார்கள் விற்க, வாங்க, மிக நம்பிக்கையாய், நா(ண)யமாய், சென்னை நகர மக்கள் அணுகும் ஸ்தாபனம்.

"சந்தரேசன், உம்ம கம்பெனி பத்தி நீர் டிவி(ல) விளம்பரம் பண்ணலையா?"

"எதுக்கு சார் டிவில விளம்பரம் பண்ணணும்."

"உம்ம மாதிரியே தொழில் பண்றவன் பண்றானே."

"வேண்டாம் சார். அதெல்லாம் பொய்யான விளம்பரம், ஏமாத்து வேலை."

"அவ்வளவு காசு கொடுத்து இந்த தொழில்ல விளம்பரம் பண்ண முடியாது சார். பண்ண வேண்டிய அவசியமும் இல்லை. பண்றதுன்னா நான் நிறைய சம்பாதிக்கணும் சார். நிறைய சம்பாதிக்க நிறைய ஏமாத்தணும்.



யாரை ஏமாத்தணும். என்னை நம்பி வந்தவங்களைத்தான் ஏமாத்தணும். ஒரு தடவை ஏமாத்தினா இன்னொரு தடவை நம்பி ஏமாறுவாங்களா சார். வாங்கறவங்ககிட்ட ஆயிரம் ரூபா. விக்கறவங்ககிட்ட ஆயிரம் ரூபா. ஒருநாள் அஞ்சு கார் வித்தா பத்தாயிரம். இது எனக்கு போதும் சார். இதில விளம்பரத்துக்கு என்ன அவசியம் வந்தது சார்."

கேட்டவர்கள் சந்தரேசனின் நேர்மை கண்டு வியப்பார்கள். அமைதி கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

"இது சுமாரான வண்டி தான். எண்பத்தஞ்சு வருஷத்து மாடல். பதினாலு வருஷம் பிடியா ஓடிருக்கு. நாயடி பேயடி அடிச்சிருக்கான்.

இந்த வண்டியை நல்ல விலைக்கு வாங்கித் தரேன். உள்ள சீட்டு உள்பட ஒரு நாற்பதாயிரம் ரூபா செலவு பண்ணுங்க. அஞ்சாயிரம் ரூபா கொடுத்து பெயிண்ட் மாத்துங்க. வண்டி புது வண்டி மாதிரி ஆயிடும். ரெண்டு லட்ச ரூபாய்க்கு ஒரு அம்பாஸிடர் கிடைக்காது. தாம்பரத்திலேர்ந்து குரோம்பேட்டை, குரோம்பேட்டைலேர்ந்து தாம்பரம். இது போறதுக்கு அற்புதமான வண்டி இது. இன்னும் மூணு வருஷம் இந்த வண்டி ஓடும். முடிச்சரட்டுமா."

பதினாலு வருஷம் பிடியா. ஓடின ஒரு வண்டியை வித்துக் கொடுன்னு கேட்கிறீயே. எவன் வாங்குவான். ஆர்.சி. புக்கைப் பார். நாலு ஓனர் கை மாறி இருக்கு. வண்டி வாங்கினவன் மொத மூணு மாசத்துல வண்டி வித்துட்டான். வாங்கினவனை ஏமாத்த முடியுமா. ஏன் மூணாம் மாசமே வண்டியை வித்தான்னு கேள்வி கேட்க மாட்டானா. இப்பல்லாம் வாங்கற பார்ட்டி ரொம்ப உஷாரா இருக்கு."

"ஐயய்ய வண்டி முட்டிருச்சு அப்படின்னு ஆர்.சி. புக் பார்த்தவுடன சொல்லிருவான். மூணாம் மாசம் வித்திருக்கான்னா அதான அர்த்தம். நாம பூசணும். மழுப் பணும். இல்லல்ல... பார்ட்டி பெரிய வண்டி வாங்கறதுனால

சின்ன வண்டி விக்கிறார் சொல்லணும். அப்படியே இரு நாலும்நாலு ஒனாஸ். ரெண்டு பே டிராவலஸ். இந்த வண்டிக் மரியாதையே இல்லை. சீ சே வேஸ்டு நஹி..."

ஆனா பயப்படாதே, ஆ மாட்டுவான். புதுசா பண சம்பாதிக்கிறவன். கார் வாங் ஆசைப்படுவான். அண்ணன் தம்பி, அக்கான்னு மூணு பே கார் வாங்க வருவாங்க. அந் மாதிரி பாராட்டிக்கிட்ட தன் விட்டுர்றேன். இந்த வண்டி ஒரு ரூபாய்க்கு போனா பெரிசு.

சும்மா பதறாதேப்பா. எத்தினி ரூபாய்க்கு வாங்கி னேனு தெரியாதா. வெறுமனே உன்வீட்டுவாசலை அடைச்சிட்டு நிக்க வச்சிருக்கறதுக்கு வித்து தொலை.

"பயப்படாதே, ஆள் மாட்டுவான். புதுசா பணம் சம்பாதிக் கிறவன். கார் வாங்க ஆசைப்ப டுவான்."

வாங்க தாம்பரத்தாரே, பார்ட் டிக்கு வண்டியை விக்கவே இஷ்ட மில்லை. அது மொதமொத வாங்கின வண்டி. ஓமா இருந் துட்டு போவுதுன்னாரு. நான் எனக்கு வேணும் சார், கொடுங்கன்னேன். ஒன்னு முப் பது. அதுக்கு அஞ்சு பைசா குறை யாதுங்கறார். முடிச்சுடலாமா,

நான் சொன்ன மாதிரி மேல அம்பது ரூபா செலவு பண் ணினா வண்டி அம்சமாயிடும். முத



மொத வண்டி வாங்கறீங்க. ராசியான வண்டி வாங்குங்க. இது வச்சிருந்த எல்லாருமே வாழ்க்கைல உயர்ந்துட்டாங்க.

கடைசியா இத வச்சிருந்த பாய் இருக்காரே... கடைல இருந்தாரு. இப்ப நாலு வண்டி ஓட்டறார். நீங்க தம்பி வாங்குங்க. வண்டி மேல வண்டியா வாங்குவீங்க. எல்லா வண்டியும் என்கிட்டயே வாங்குவீங்க. முடிச்சரட்டுமா...

பாய் ஒன் ட்வென்டி ஃபைவுக்கு முடிச்சுத் தரேன். இதுல கையெழுத்து போடு. காச பிடி. என் கமிஷன் ரெண்டாயிரம் கொடு.

இந்தாங்க தாம்பரத்தாரே, வண்டி, வண்டி சாவி. ஒண்ணு முப்பது கொடுங்க. என் கமிஷன் ரெண்டு ரூபா கொடுங்க.

யோசிக்காதீங்க. காச வைங்க. எனக்கு அடுத்த வண்டிக்கு போகணும்.

சந்திரேசன் நன்றாகச் சம்பாதித்தார். அதிகம் அநியாயம் செய்யாமல் சம்பாதித்தார். அப்படி சம்பாதிக்கும் சாமர்த் தியம் அவரிடம் இருந்தது.

அந்த சாமர்த்தியத்தில் பத்தில் ஒரு பங்கு கூட ராமச்சந்திரனிடம் இல்லை. தன்னிடம் இல்லை என்பது ராமசந்திரனுக்குத் தெரியும். ஏதோ ஒருநாள் அந்த சாமர்த்தியம் தனக்கு வந்துவிடும் என்று நம்பி னான்.

சாமர்த்தியம் என்பது வருவதல்ல. பெறுவது. உழைத்துப் பெறுவது. அப்படி உழைத்துப் பெறுவதற்கு ஒரு மனோ வேகம் தேவை.

ராமசந்திரனிடம் மனோவேகம் இருந்தது. ஆனால், அது வேறு ஒரு இடத்தில் சிக்கியிருந்தது.

அந்த சிக்கலின் பெயர் சுசீலா.

"இங்கேர்ந்து பார்த்தா நீங்க அஜீத் மாதிரியே இருக்

கீங்க.''

அவள் டைப்ரைட்டர் மெஷி
மீது நெஞ்சை அழுத்திக் கொண்
பேசுவாள்.

''ப்ளீஸ், தயவு செய்
ப்ளெயின் ஷர்ட் போடாதீங்
செக்ட் ஷர்ட் போடுங்க. அப்ப
டிரஸ் வேண்டாம். செக்ட் ஃ
ஷர்ட் போட்டு அதை இன் பண்ண
கை மடிச்சு விட்டுருங்க. ஸ்போர்ட
ஷூ போடுங்க. நல்ல பெல்
போடுங்க.

தலைக்கு ஷாம்பு போட்
பிறகு கண்டிஷனர் போடுங்க
இம்போர்ட்டட் கண்டிஷனர் மு
நூறு ரூபாய்க்கு விக்குது. தலைக்கு
போட்டு டென் மினிட்ஸ் கழிச்
வாஷ் பண்ணிடுங்க. அப்படியே
கொலைக் குத்தா செட்டிலாயிடு
யார் போட்டாலும், அஜீத் மாதி
தலை ஆயிடும்.''

அவன் காசு செலவழித்து
செய்து கொண்டு வருவான். அவ
அருகே வந்து அவன் தலையைத்
தடவுவாள்.

''கடவுளே, எவ்வளவு நல்லாயி
ருக்கீங்க.''

அவள் மூச்சுக்காற்று அவன்
மீது படும். அவள் மார்பின் விளிம்
புகள் அவன் கண்ணைத் தாக்கும்.
அவள் பிருட்டத்தின் குழைவு
எப்போதாவது மோதும்.

''இன்னொன்னு சொல்லித்

''இங்கேர்ந்து பார்த்தா நீங்க அஜீத் மாதிரியே இருக்கீங்க.'' அவள் டைப்ரைட்டர் மெஷின் மீது நெஞ்சை அழுத்திக் கொண்டு பேசுவாள்.



தரேன். கேட்கறீங்களா, ராம்.'' சுசீலா சுந்தரேசன் அலுவல கத்தில் இல்லாதபோது கொஞ்சுவாள்.

கிரேன்னு ஒரு கம்பெனி. இருபத்தஞ்சு ரூபாய்க்கு ஒரு ஹெர்பல் ஃபேஸ்பேக் விக்கறாங்க. அதாவது இது முகத்துக்குப் போடற மருந்து. இதைப் பன்னீர்லயோ, தண்ணீர்லயோ குழைச்சு முகம் முழுக்க அப்பிடணும். அப்புறம் உலர்ந்த பிறகு நல்லா கழுவி டணும். மூஞ்சி பளீர்னு இருக்கும். எண்ணெய்ப் பிசுக்கு போய் ஒரு பளபளப்பு வந்துரும்.

இந்த கண்ணுக்குக் கீழ் போடறதுக்கு ஒரு க்ரீம் இருக்கு. உதடு பளபளன்னு இருக்கறதுக்கு ஒரு ஆயில் இருக்கு. ஒரிஜினல் சந்தன ஆயில் இங்கக் கிடைக்கும். இம்பல்ஸ்னு ஒரு பாடி ஸ்ப்ரே அங்கக் கிடைக்கும்.

நீங்க அழகா இருக்கீங்க. இன்னும் அழகு பண்ணிக்க லாமில்லே. இவ்வளவு சொல்லித் தரேனே, எனக்கு ஏதாவது வாங்கித்தரக் கூடாதா. வேணாம். ரொம்ப செலவு பண்ணா உங்க அண்ணா கேட்பார்.

உங்க அண்ணா கார் பண்றா மாதிரி நீங்க ஸ்கூட்டர் வியாபாரம் பண்ணுங்களேன். டூ வீலர் நல்லா போகு மில்லே. நான் ஹெல்ப் பண்றேன்.''

''ஸ்கூட்டர் வியாபாரம் தேவையில்லை. ஒழுங்கா கார் பண்ணு போதும்.''

சுந்தரேசன் ராமச்சந்திரன் முயற்சியை தடை செய்தார்.

''யானை விக்கற இடத்துல குதிரை விக்கக் கூடாதுடா. அது வேற வியாபாரம். இது வேற வியாபாரம்.''

அந்தக் கஸ்டமர்ஸ் வேற. இந்தக் கஸ்டமர்ஸ் வேற.

ஒரு வாரத்துல பென்ஸ் கார் வேணும்னு ஒரு பார்ட்டி இங்க வந்து உட்கார்ந்திட்டிருப்பான். என்னாங்க நம்ம ஸ்கூட்டர் வித்துட்டீங்களான்னு வேற ஒரு லுங்கி உள்ள வரும்.

அப்ப நம்ம லுங்கி பார்ட்டியையும் மதிக்க முடியாது. பென்ஸ் பார்ட்டியையும் கவனிக்க முடியாது.

அதனால தயவு செய்து வைத்தியக்காரத்தனமா

எதுவும் பண்ணாதே.

அந்த நடிகர் வந்த-உடனே அவர்கிட்ட கையெழுத்து வாங்கறயே, உனக்கு ஏதாவது அறிவிருக்கா."

"இல்லண்ணா, சுசீலா வாங்கித் தரச்சொன்னா."

"அந்த சுசீலா ரெண்டுங்கெட்டான். சாதாரண டைப்பிஸ்ட். அவகூட நீ ஜாஸ்தி பேசறே. அது எனக்குப் பிடிக்கலை. குறைச்சுக்கோ. இன்னொரு தடவை பேசறது பார்த்தேன், நான் ரொம்ப கெட்டவனாயிருப்பேன்."

நாலு பேர் காதில் படாமல் தனியே தன் ஏ.ஸி. அறையில் கூப்பிட்டு கண்டித்தார். ஆனால், ராமசந்திரன் அதை சுசீலாவிடம் சொன்னான்.

"என்னாலதான் உங்களுக்கு இந்த கஷ்டம். நான் விலகிக்கறேன். உங்க வாழ்க்கைலேர்ந்தே விலகிக்கறேன். என்னை ஆசீர்வாதம் பண்ணி அனுப்புங்கோ."

யாருமில்லாத போது அவள் அவன் காலைத் தொட்டுத் தேம்பினாள்.

அவன் அவளை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டான். அவள் அதிகம் மெத்து மெத்தென்று இருந்தாள்.

"நீ போகவேண்டாம். போகக் கூடாது. போக விடமாட்டேன்."

■
அவன் அவளை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டான். அவள் அதிகம் மெத்து மெத்தென்று இருந்தாள்.
■



என்று பிதற்றினான்.

அன்று மாலை போகும்போது அவள் ஒரு அறநூறு ரூபா இருக்குமா, எங்கம்மாவுக்கு ஹார்ட் ப்ராப்ளம். ஆஸ்பத்திரிக்குப் போகணும் என்று கேட்டாள்.

அவன் ஆயிரம் ரூபாய் கொடுத்தான். அவள் அவன் கைகளைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

உங்களை என்னால் மறக்கவே முடியாது என்று சொன்னாள்.

அவர்கள் நட்பு அல்லது காதல் அல்லது வேறெதோ வடக்கே இருந்து வீசும் குளிர்காற்று போல வேகமாய் பரவியது. பரம சுகமாய் படர்ந்தது.

பெண் சிநேகத்தை நட்பை எடைபோட பல ஆண்களுக்குத் தெரியவில்லை. அப்படி எடைபோட முடியாமல் பெண்களின் பேச்சும் உடம்பும் தடுக்கிறது.

பெண்களின் மகிழ்ச்சியான பேச்சுக்கு ஒரு ஆண் மயங்குவானானால், அவன் முன்னேறுவது கடினம். அவனால் வலிமை பெற முடியாது. அவன் சிந்தனைகளில் தெளிவும் நிதானமும் இருக்காது.

கடும் போதையில் இருக்கும் ஒரு ஆளை ஐந்து ஐந்தாக நோட்டுகளை எண்ணி வை என்று சொன்னால், அவனால் எண்ணி வைக்க முடியாது. அதே விதமாக பெண் வழியே வரும் புகழ் போதைக்கு அடிமையானவனின் செயல்களில் தெளிவு இருக்காது.

ஆட்டோமொபைல் கன்சல்டன்ஸி நெருப்பாற்றில் கடற்பாலத்தில் ஓடுகிற விரைவு கொண்ட விஷயம். கண்களும், காதுகளும் மிகக் கூர்மையாக இருக்க வேண்டும். நினைவாற்றல் உச்சக்கட்டத்தில் இருக்க வேண்டும்.

காதல் போதை இங்கே எதிர்பதமாய் இருக்கும் விஷயம்.

ராமசந்திரன் தொழிலும் தெளிவில்லாமல் பெண், விஷயத்திலும் முழுமை இல்லாமல் திண்டாடினான்.

பெண் ஒரு கிரியாசக்
ஆணை அவள் உற்சாகப்
வேண்டும். எத்தனை வேலை
பளு இருந்தாலும் அவள் அ
அடையாமல் தொடர்ந்து ஓடவ
செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாத பெ
ஆணுக்கும் சுமை. கால் விலங்
உடம்பைச் சுற்றியுள்ள முள்

சுசீலா என்கிற அந்த
பெண்ணுக்கு கிரியா சக்தியா
இருக்கத் தெரியவில்லை. மாற
கப்பட்ட" தந்திரக் கணக்கு
அவள் மனதில் உருவாகின.

அம்மாவுக்கு உடம்பு சரியி
லைன்னவுடனே ஆயிரம் ரூபா
கொடுத்துட்டானே. அடுத்
தடவை என்ன சொல்லலா
என்ன சொன்னா நிறைய கா
தருவான்.

அவள் மனசுக்குள் நாடகம் த
ரிக்கத் துவங்கினாள்.

அவள் நாடகத்துக்கு உப பாத்
ரங்கள் தேவைப்பட்டன.

அவள் மெல்ல தன் தாயிட
பேசத் துவங்கினாள்.

"நான் அழகா இருக்கே
னாம்மா"

"இருக்கே. என்ன அதுக்
இப்போ."

"ரொம்ப அழகா இருக்கே
னாம்மா."

■ "பருவ வயசுல பன்னியும் அழகு தான்." "ச்சீ நாயே, ஒழுங்கா பதில் சொல்லு" பெண் அம்மாவைப் பார்த்து கத்தியது. ■



"பருவ வயசுல பன்னியும் அழகு தான்."

"ச்சீ நாயே, ஒழுங்கா பதில் சொல்லு" பெண் அம்மாவைப் பார்த்து கத்தியது.

"ஏன் கேட்கறே... மொதல்ல அதைச் சொல்லு"

"எங்க முதலாளி பையன் என்னையே முறைச்சு முறைச்சு பார்த்துண்டிருக்கார்."

"என்னடி சொல்றே."

"கையை பிடிச்சு கண்ணுல ஒத்திண்டாரு."

"என்னது..."

"ஒண்ணும் ஆகலை. பயப்படாதேம்மா"

"இதெல்லாம் பண்ணாதீங்க சார். நான் ரொம்ப ஏழைக் குடும்பம். விட்டுடுங்க சாருன்னு கெஞ்சிக் கேட்டேன். விட்டுட்டார்."

சுசீலாவின் அம்மா சற்றுநேரம் மௌனமாக இருந்தாள்.

"ஏன் அப்படி பண்ணினான்."

"நான் தேவதை மாதிரி இருக்கேனாம்."

"இவ்வளவு குண்டா எந்த தேவதை இருப்பா."

"சனியனே. நீயே என்னை கேலி செய்தா எனக்கு எப்படி நல்ல காலம் பொறக்கும்."

"அப்புறம் என்ன நடந்தது."

"ஒண்ணும் நடக்கலை."

"என்னிக்கு இது நடந்தது."

"பத்து நாளைக்கு முன்னாடி."

"அப்புறம் தொடலேயில்லையா."

"கிட்டக்கவே வரலை" பெண் அசராமல் பொய் சொன்னாள்.

"என்னடி இப்படி பண்ணிட்டே. நல்லவாளையெல்லாம் இப்படி முறிச்சுக்கப்படாது."

"ஏன்? முதலாளி பையன் நல்லவர்னு உனக்கு எப்படி தெரியும்."

''கையைப் புடிச்சு முத்த[illegible] கொடுக்கறவா நல்லவாளாதானே இருப்பா.''

''அது எப்படி?''

''கண்ணடிக்காது காமாந்த[illegible] மாகப் பேசாத. இப்படி செய்யறவ[illegible] மரியாதைப்பட்டவா...''

''எனக்கும் அப்படித்தாம்ம[illegible] பட்டுது''

''அடுத்த தடவை பார்த்த[illegible] கொஞ்சம் சிரிச்சு பேசு...''

''நான் பேசினேம்மா இன[illegible] னிக்கு''

''அப்படியா? என்ன சொன்[illegible] னார்?''

''ஸாரி சொன்னார்மா''

''அப்புறம்...''

''எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லை, டாக்டர்கிட்ட கூட்டிட்டு போகணும்னு சொன்னேன். டக்குனு ஆயிரம் ரூபா கொடுத்துட்டாரும்மா''

**''கையைப் புடிச்சு முத்தம் கொடுக்கறவா நல்லவாளா தானே இருப்பா.''**

''ஆயிரமா... ஆயிரம் ரூபாயா... எங்கேடி எங்க காசு''

பெண் பர்ஸ் திறந்து காசு எடுத்து விசிறி போல் ஆட்டியது.

''ஐயோ கொடுடி. வீட்டுச் செலவுக்கு வேணும்டி''

''ஆசை தோசை அப்பளம் வடை... நான் அஞ்சு பைசா தர மாட்டேன்.''





''ஏண்டி''

''நீ வட்டி கட்டறேன், கடனை அடைக்கறேன்னு வேட்டு விட்டுருவே.''

''உனக்காகத் தாண்டி கடன் வாங்கினேன்''

''நானா வாங்கச் சொன்னேன்.''

''நாயே... நான் கடன் வாங்கின காசுல நானூத்தி அம்பது ரூபா சுடிதார் வாங்கினயேடி. அப்ப அம்மா வேண்டி இருந்துதா.''

''அது உன் கடமை. ஒரு பெண்ணுக்கு அம்மா பண்ண வேண்டிய கடமை.''

''பதிலுக்கு நீ எனக்கு பண்ண வேண்டாமா''

''வேணா... நூத்தி அம்பது ரூபாய்ல ஒரு புடவை வாங்கித் தரேன்.''

''நூத்தி அம்பது ரூபாய்ல புடவையா, நன்னாருக்குடி நீ பேசறது. எனக்கு நல்ல புடவையா வாங்கிக் கொடு''

''சரி இருநூத்தம்பது...''

''இன்னும் நல்ல புடவையா வாங்கிக் கொடுடி. என் கண்ணுல்ல...''

''சரி மூஞ்சி அலம்பிண்டு வா. கடைக்கு போகலாம், இப்பவே''

''ஆபீஸ்லேர்ந்து இப்பதான் வந்தே. உடனே கிளம்ப றேங்கறியே ஒண்ணுமே சாப்பிடலையே?''

''எங்கயாவது ஹோட்டல்ல பார்த்துக்கலாம், கிளம்பு''

''ராயர் ஹோட்டல்ல மைசூர் பாக் நன்னாருக்கும்டி. மசால் தோசை தின்னு நாளாச்சு.''

''இன்னிக்கு உனக்கு ரெண்டு மைசூர் பாகு, ரெண்டு மசால் தோசை...''

அம்மாவும் பெண்ணும் மின்னல் வேகத்தில் வெளியே கிளம்பினார்கள்.

''ஏண்டி... அம்மா மசால் தோசையை வாயில் குத்தி

அடக்கிக் கொண்டு அவனைக் கூப்பிட்டார்."

"அந்தப் பையன் உன்னைக் கல்யாணம் பண்ணு பானா, இல்லை நடுவுல ஏமாத்திட்டு ஓடிப் போவ வானா."

"கல்யாணம் பண்ணிப்பான்னு தான் தோணறது."

"ஏன் சந்தேகமா சொல்றே?"

"அவர் சரின்னு சொன்னாக் கூட அவர் அண்ணா வ மாட்டான்."

"ஏன்..."

"காசாசை பிடிச்சவன். தம்பியை நாய் மாதிரி நட த்தறான்."

"ஏமாந்துராதடி எதுவா இருந்தாலும் என்னைக் கேட்டு பண்ணு"

"எல்லாத்தையுமா கேட்க முடியும்"

"நமக்குள்ள என்னடி நாம என்ன அம்மா பொண்ணவாப் பழகறோம். நான் எவ்வளவு நல்லவ போகப் போகத் தெரிஞ்சப்பே, என் நல்ல குணம் அந்த கட்டைல போறவனுக்குத் தெரியலை. தெரிஞ்சிருந்த என்னை சந்தில வச்சிட்டு போயிருக்க மாட்டான்."

அவள் தன் புருஷனை எச்சல் கையோடு நெட்டி முறித்து சபித்தாள்.

"போதும் இந்த சந்தோஷமான நேரத்துல அவனை பத்திப் பேசாதே. காபியா, போர்ன்விடாவா"

மகள் தாயைச் சமாதானப்படுத்தினாள். "உனக்கு முன்னூத்தம்பது ரூபா புடவை வாங்கி தரேன். கண்ணை துடைச்சுண்டு அடுத்து என்ன பண்ணலாம்னு சொல்லிக் கொடு."

அவர்கள் புடவைகள் வாங்கினார்கள். காபிப் பொடி, சர்க்கரை, கடலை மாவு, பவுடர் டின், முந்திரிப் பருப்பு, உலர்ந்த திராட்சை, சலவை சோப்பு, வாசனை சோப்பு எல்லாம் வாங்கினார்கள்.



ஆயிரம் ரூபாயில பதினோரு ரூபாய் ஐம்பது பைசாதான் பாக்கியிருந்தது.

அன்று இரவு அம்மா மகள் பக்கத்தில் படுத்துக் கொண்டு யோசித்தாள். சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"அவனை விடப்படாதுடி எப்படியாவது இன்னொரு ஆயிரம் ரூபாய் அவன்கிட்ட வாங்கிண்டு வந்துரு"

"எப்படி வாங்கறது?"

"எனக்கு உடம்பு ரொம்ப மோசமாயிடுத்துன்னு சொல்லு. அவன் அண்ணாக்கிட்டயே கேளு"

"அண்ணா தரலைன்னா"

"வேலையை விட்டு நின்னுக்கரேன்னு சொல்லு"

"பெரியவா சரின்னுட்டா...?"

"சின்னவன் விடமாட்டான். உன் பின்னாலயே வருவான்."

"எப்படி சொல்றே"

"அடியே... நான் பொறக்கும் போது கிழவியாவா பொறந்தேன். நானும் உன்னை மாதிரி இளமையா இருந்தவள்தாண்டி காபி கேட்கறதுக்கு முன்னாடி நீ என்ன பண்றே..."

அம்மா குசுகுசவென்று பேச ஆரம்பித்தாள். பெண் கவனமாய் கேட்க ஆரம்பித்தாள்.

"அடியே... நான் பொறக்கும் போது கிழவியாவா பொறந்தேன். நானும் உன்னை மாதிரி இளமையா இருந்தவள் தாண்டி

சில மனிதர்களுக்கு காசு மிக முக்கியம். மட்டும்தான் முக்கியம். மற்ற தர்மங்கள் எதும் அ மனதில் தோன்றுவதில்லை. காசு சம்பாதிக்க செய்வதில்லை. பணம் சம்பாதிக்க எ எப்போதும் செய்யத் தயாராகிவிடுகிறா பணத்தின் ருசி தெரிந்தவர்களுக்கு தர்மத்தின் வா தெரியாது.

சசிலாவின் அம்மா பார்வதி வாழ்க்கை வேதனைகளை விதம்விதமாய் அனுபவித்த நான்கு பெண்களுக்கு நடுவே போராடி வளர்ந்தவள். ஆனாலும் கசப்படாதவள்.

வாழ்க்கையின் எந்த ரசமான விஷயங்களும் அவளு மறுக்கப்பட்டே வந்திருக்கின்றன. மிக அடிப்படை சுகங்கள் கூட அவள் புருஷனால் அவளுக்குத் முடியவில்லை. அப்படியானால் எதற்கு புருஷன் எ கேள்வி கேட்டாள்.

வெறும் பாதுகாப்புக்கு என்று சமூகம் பதிலளி போது, எனக்கு அந்த பாதுகாப்பு தேவையில்லை எ மறுத்தாள்.

சமையல் வேலை செய்யும் அண்ணனுக்கு அரு குடிபோனாள். அவள் அண்ணன் அலுவலங்களு டிபன் கேரியரில் உணவு அனுப்பிக் கொண்டிருந்த அங்கே போய் அண்ணனுக்கு உதவியாக காய் நறுக்கிக் கொடுத்தும், தானியங்கள் சுத்தப்படுத்தி உதவிகளும் செய்து வந்தாள்.

அண்ணன் கொடுத்த இரண்டாயிரம் ரூபாய், ம கொண்டு வரும் இரண்டாயிரம் ரூபாய், மொத்தம் நா யிரம் ரூபாய், குடும்பத்துக்குப் போதுமானதாக இருந்த உல்லாசத்துக்குப் போதுமானதாக இல்லை.

ஆனால், அவள் கணிப்பில் வாழ்க்கை என்பது உல் சமமானது. உல்லாசம் இல்லையெனில் வாழ்க்கையே இல்லை.

இளம் வயதில் மறுக்கப்பட்ட உல்லாசத்தை, பரு



வயதில் கிடைக்காத உல்லாசத்தை. மத்திய வயதில் அவள் அடைய விரும்பினாள். அதற்காக, அச்சமில்லாமல் கடன் வாங்கினாள். வெட்கமில்லாமல் கடன்காரர்களுக்கு பொய் சொன்னாள். மூன்று வட்டிக்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கி அட்டகாசமாய் தீபாவளி கொண்டாட அவளால் மட்டுமே முடியும்.

கலர் டிவிக்கு கடன் வாங்கிவிட்டு அதை அடைக்காமல் ஏமாற்ற அவளால் மட்டுமே இயலும்.

மாதாந்திரத் தவணையில் புடவை விற்கின்ற பெண்களிடம் தவறான விலாசம் கொடுத்து புடவை வாங்குவாள். அப்படி மீறி இடம் கண்டு பிடித்துவிட்டால் என்ன புடவை எப்போது வாங்கினேன். உலகத்துல ஒருத்தர் மாதிரியே ஏழு பேர் இருப்பாளாம், நீ வேற யார்கிட்டயாவது புடவை வித்துட்டு என்கிட்ட கேட்கறியா என்று பயமே இல்லாமல் கேட்பாள்.

பார்வதிக்கு உரத்த குரல், வெட்கமே இல்லாத சுபாவம். அவளைச் சண்டையிட்டு யாராலும் ஜெயிக்க முடியவில்லை.

மகள் காதலித்து ஆயிரம் ரூபாய் சம்பாதித்ததைப் பார்த்ததும் அவள் விரைவாக சில கணக்குகள் போட்டாள்.

சந்தரேசனுடைய கம்பெனியை அவள் பார்த்திருக்கிறாள். சந்தரேசனை, சந்தரேசன் மனைவியைப் பார்த்திருக்கிறாள். சந்தரேசன் வீட்டிற்கு ஒரே ஒரு முறை போயிருக்கிறாள்.

அந்த வீட்டில் தொடர்பு ஏற்பட்டால் வாழ்க்கை முழுதும் மசால் தோசை சாப்பிடலாம். ஆடி வெள்ளிக் கிழமை, கார்த்திகை தீபம், காரடையான் நோம்பு ஆகிய எல்லாவற்றிற்கும் புதுசு கட்டிக்கலாம். அங்கேயும் இங்கேயும் தாவிப் போகலாம். வெகு நாளாய் ஆசைப்படுகிற கல் அட்டிகை போட்டுக் கொள்ளலாம். ஏழு ரூபாய் கொடுத்து நானூற்றி இருபது ஜர்தா வாங்கலாம். வீட்டில் அமர்ந்தவாறே புதுப்படங்களை வீடியோவில் பார்க்கலாம்.

எல்லாம் சரியாக வந்தால், தொ
மாய் வீடுகூட வாங்கலாம், ந
ஐந்து குடித்தனங்களை வை
அதிகாரம் பண்ணிக் கொண்டி
கலாம்.

இது எல்லாவற்றிற்கும் ஆ
பமாய் மகளைத் தயார் செ
வேண்டும்.

காதலாக இருக்கவும், கெ
மாக இருக்கவும் சொல்லித்
வேண்டும். மீன் சிக்கியதென்
தலையில் அடித்து பொரித்து
துவிட வேண்டும். அவள் ம
காதோரம் ஒரே ஒரு உபதே
செய்தாள். ''அவன் உன்னை
தொடட்டும் விடு. பதிலுக்கு நீ
தொடு. கெட்டுப் போயிடு
மோன்னு கவலைப்படாதே, எல்
நான் சொல்லித்தரேன்.''

''அவன் உன்னை தொடட்டும் விடு. பதிலுக்கு நீயும் தொடு. கெட்டுப் போயிடுவமோன்னு கவலைப்படாதே.''

சுசீலா மிக சந்தோஷமாய் அ
லுவலகத்திற்குப் போனாள். அ
அலுவலகத்தின் கதவுகளை மூ
கொண்டிருந்தார்கள்.

''பெரியவரோட அக்
செத்துட்டாங்க. இன்னைக்
ஆபீஸ் லீவு. நீ பாட்டுக்கு வீட்டு
பக்கம் போகாதே.''

அவள் வீட்டிற்கு விரைந்
போய் அம்மாவிடம் தகவ
சொன்னாள். அம்மாவும், பெ
ணும் முகத்திற்கு பவுடர் போட்டு
கொண்டு சுந்தரேசன் வீ
நோக்கிப் போனார்கள்.





சுந்தரேசன் வீட்டில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. அழுகை பலமாக இருந்தது.

பெண் குழந்தைகளின் கதறல் தாங்காமல் சுந்தரேசனும் விசும்பி அழத் துவங்கினார். அவருக்கு எதிரே இருப்பது யாரென்றே புரியவில்லை. மனம் பேதலித்துக் கிடந்தது.

தாயும் மகளும் இழவு வீட்டில் சுவரோடு ஒட்டிக் கிடந்தார்கள்.

அவர்களைப் பார்த்துவிட்டு ராமசந்திரன் திகைத்தான்.

''அவர்தாமா ராமு'' மகள் தாய்க்கு அடையாளம் காட்டினாள்.

''என் பின்னாலேயே வா சொல்றேன்'' தாய் மகளுக்குக் கட்டளையிட்டாள்.

நேரே போய் ராமசந்திரன் கைகளைப் பிடித்துக் கொண்டு, என்ன இப்படி ஆயிடுத்து என்றாள்.

ராமசந்திரன் கலவரமானான். தான மகளிடம் தவறாக நடந்துவிட்டதாய் தாய் சொல்கிறாளோ என்று பயந்தான்.

''ரொம்ப பாவம்... ரொம்ப பாவம்'' தாய் செத்துப் போனவளை நினைத்துக் கொண்டு துக்கம் கேட்டாள். ராமசந்திரன் இன்னும் பயந்தான்.

''நான் ஒரு பாவமும் பண்ணலையே'' நகங்களை நெருடிக் கொண்டு கேட்டான்.

பார்வதி கெட்டிக்காரி, பிள்ளை மிரளுகிறது என்று உடனே புரிந்துக் கொண்டாள். உடனே சிக்க வைக்க ஆசைப்பட்டாள்.

''பாத் ரூமுக்கு வழி இருக்கா'' ராமசந்திரனைக் கேட்டாள்.

அந்த பக்கமா போகணும்.

''கொஞ்சம் வழி காட்டுங்கோ''

அம்மாவும், பெண்ணும் அவன் பின்னால் நகர்ந்தார்கள்.

"இந்த நேரத்துல இருக்கி அணைச்சுக...
மனசுக்கு இதமா இருக்கும். சுசீலா உங்க மேல உ...
வச்சிருக்கா. அழுது அழுது கண்ணே சிவந்து போ...
சுசீலா ராமுவை கவனிச்சுக்கோ."

"ஐயோ இங்க வேண்டாம்" ராமு உளறினான்.

"வேற எங்க சௌகரியம்."

"மாடில ஒரு பாத் ரூம் இருக்கு"

"எப்படி போறது"

அவன் வழிகாட்ட அம்மா பெண்ணை பின்ன... அனுப்பினாள். தாராளமா இரு கிசுகிசுத்தாள்.

அவன் பாத் ரூமில் தயங்கி நிற்க, சுசீலா அவ... உள்ளே தள்ளிக் கொண்டு போனாள்.

தாயார் வெளியே காவலிருந்தாள்.

நல்லவர்களால் இத்தகைய ஆபத்தான விஷயங்க... ஈடுபட முடியாது. இதற்கு மிகுந்த பொல்லாதத் தன... வேண்டும். எது பற்றியும் அச்சப்படாத குணம் வேண்டு... அச்சப்பட வேண்டியவைகளுக்கு அச்சப்பட்டு தா... வேண்டும் என்ற மகா வாக்கியங்களை மறந்துவி... வேண்டும்.

பத்து நிமிடங்கள் கழித்து ராமசந்திரன் வெளி... வந்தான். வியர்த்துப் போயிருந்தான். சுசீலா களைத்து... போயிருந்தாள். "போலாம்மா லேட்டாயிடுத்து."

"எண்ணூத்தி பன்னிரெண்டு ரூபா அம்பது பைச... பெண் பேசியது.

"என்னதுடீ"

"சப்ஜெக்டா கறந்துட்டேன். என் என்னமோ மாதி... நடக்கற, காலல அடிப்பட்டிருச்சா..."

"டேப்ரெக்கார்டரை முழங்கால்ல கட்டிண்டா பிற... எப்படி நடக்க முடியும்."

"எய்... காட்டு"

"ஆட்டோ பிடி அப்பத்தான் அவிழ்க்க முடியும்."





"மூன்று சிப்பன்களால் ஒரு முழு டேப்ரெக்கார்டர் கணுக்காலில் இருந்து, முழங்கால் வரை கட்டப் பட்டிருந்தது. இரண்டு பார்க்கர் பேனாக்களையும், உள்ளங்கை அகல வெள்ளி வெங்கடாஜலபதி படத்தையும் அவள் ஜாக்கெட்டிலி ருந்து எடுத்து மகளிடம் கொடுத்தாள்.

"இதை நான் ஆபீசிற்கு எடுத்து போக முடியாதே" மகள் கவலைப் பட்டாள்.

"உனக்கெதுக்கடி பேனா. இதை எங்கேயாவது வித்து டலாம்."

"என்னடி ஆச்சு உள்ளே..."

"முதல்ல ஆ... ஊ... ன்னான். கொஞ்சம் உரசின உடனே நாய் மாதிரி கடிக்க ஆரம்பிச்சுட்டான்."

"அப்புறமா அவனை வீட்டுக்கு வரப்பண்ணு"

"அவா அண்ணா, அந்த சுந்த ரேசன் ரொம்ப முரடுமா"

"நானிருக்கச்ச ஏண்டி கவ லைப்படற. என்கிட்ட எந்த முர டனும் வாலாட்ட முடியாது. அந்த ராமசந்திரன் நல்லா தொட்டுட் டான் இல்லையா."

"உடம்பெல்லாம் வலிக்கறது."

"அதுபோதும் விடு. நான் பார்த்துக்கறேன். மசால் தோசை சாப்பிடலாமா"

■

"முதல்ல ஆ... ஊ... ன்னான். கொஞ்சம் உரசின உடனே நாய் மாதிரி கடிக்க ஆரம்பிச் சுட்டான்."

■

"ஏம்மா... தீட்டில்லை... குளிக்க வேண்டாமோ..."

"சாப்பிட்டுக்கூட குளிக்கலாம். ஒண்ணும் பில்லை. பசி வந்தா பத்தும் பறந்து போகுங்க அத்தோட சாவுத் தீட்டையும் பதினொன்னா கறது." தாயும், மகளும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

துக்கம் நடந்த வீட்டில் பெண்ணோடு கூடக்கூடா அப்படி கூடியவர்களுக்கு துக்கம் கூடும் என்பது நம்பிக்கை.



# அன்புள்ள மான்விழியே...



## 3

**சௌ**தாமினிக்கு துக்கத்தைவிட கோபம் அதிகமாக இருந்தது.

"எங்கப்பாவுக்கு தகவல் சொல்லாதீங்க மாமா. சொல்ல வேண்டிய அவசியமில்லை. பொண்டாட்டிய வைச்சுக் காப்பாத்தாதவன் கொள்ளிப் போட மட்டும் வரணுமா. வேண்டாம் மாமா. நான் கொள்ளிப் போடறேன். அவ எரிஞ்ச பிறகு எலும்பெல்லாம் அள்ளணும். நான அள்ளறேன். சாவுப்பத்தி எனக்கு பயமே இல்லை. ஆனா... ஒருத்தர் இப்படி சாகக் கூடாது."

"இல்லை சௌதாமினி இது தப்பு. நாளைக்கு உலகம் என்னைத் தப்பாப் பேசும். பொண்டாட்டி மேல ஆம்படையானுக்குள்ள உரிமை, அம்மா மேல பொண்ணுக்குள்ள உரிமையை விட அதிகம். அவனை ஜெயிலிலிருந்து வெளிய கொண்டு வந்து கொள்ளிப் போட வைக்கறது என்னோட கடமை. அவன் மாட்டேன்னா... நான்

கொள்ளிப் போடுவேனேத் தவிர, உன்னை அது…
மாட்டேன்.''

''என்ன... நான் பொம்பளை. அதுதான் காரணமா…
இப்படி இழிவுபடுத்தறேள்.''

''நம்ம மதம் பெண்ணை இழிவுபடுத்தவே இல்லை… அவங்க அவங்களுக்கு தனித்தனியா வேலை… கொடுத்திருக்கு. நோய்ப்பட்டா பெண பார்த்துக்கணும்… நோய்ப்பட்டவர்கள் செத்துப் போயிட்டா ஆண் பார்த்து… கணும். ஆண், பெண் சுதந்திரம் பத்தி நாம தனியா… பேசுவோம். இப்ப இந்த விஷயத்தை என்கிட்ட விட்டுடு… உங்க அம்மாவுக்கு நீ கொள்ளிப் போட்டாங்கறது நாலு… பேருக்கு தெரிஞ்சா, ரொம்பத் தப்பா பேசுவா. தயவுசெய்து… வேண்டாம்.''

போலீஸ் சுந்தரேசனின் அக்காள் புருஷனை கைப்பி… இழுத்து வந்தது.

''இந்தாளு திருவான்மியூர்ல தான் சார் இருந்தாரு… தண்ணி போடற பார்ட்டியெல்லாம் விதவிதமா சாப்பிட… திருவான்மியூர் பீச்சுக்குத்தான் வருவாங்க. நாங்க ஆளு… போட்டு காத்திருந்து புடிச்சுட்டோம்.

இவனுக்கு எப்படி சார் பொண்ணு கொடுத்தீங்க… எங்களான்டயே வண்டை வண்டையாப் பேசறான்… சப்-இன்ஸ்பெக்டர் கடுப்பாகி மொக்கு மொக்குன்னு… மொக்கிட்டார்.

சுந்தரேசன் பதிலே சொல்லவில்லை.

சொர்ணலக்ஷ்மியின் புருஷன் சுந்தரேசனைப் பார்த்தவுடன் வாய்க் கோணி அழுதான். பெண குழந்தைகளைப் பார்த்தவுடன் மார்பில் அடித்துக் கொண்டான்.

சௌதாமினி நாலடி முன் வந்து தகப்பன் முகத்தில் தூ... வென்று துப்பினாள்.

என்ன இருந்தாலும் அவர் உங்க அப்பா. யாரோ அடுத்த வீட்டு ஆள், நீதி சாஸ்திரம் சொல்ல அவன் அவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் வீட்டு வாசலுக்கு



வெளியே விட்டா…

''உனக்கு வாழ்க்கை தெரியாது. உங்கப்பன் உங்கமாவ… ஒரு நாளைப் போட்டுட்டிருந்தான். அதனால உனக்கு ஒரு இருளும் தெரியாத பேசறே. நான் கத்துண்ட பாடம் வேற. தயவுசெய்து என்னைக் குறை சொல்லாதே. அப்படி குறை சொல்றதா இருந்தா இந்த வீட்டுக்கு வெளியே சொல்லு.''

''அட... இந்தப் பொண்ணு பெரிய லங்கிணியால்ல இருக்கு. என கையைப் புடிச்சு வெளியே அனுப்பிச்சு முடிச்சு போச்சு. அப்பன் மூஞ்சில துப்பறது தப்பு'' அவர் வாசலில் நின்று கத்தினார்.

சுந்தரேசன் அடுத்த வீட்டு வாசலுக்கு போன் சுழற்றினார். சத்தம் போட்டவர் மனைவியிடம் பேசினார்.

''தயவு செய்து உங்க புருஷனை உள்ள கூட்டிண்டு போங்க. இல்லன்னா காரை கியர்ல்ல எடுக்கறமாதிரி அவர் மேல இடிச்சு நாசம் பண்ணிடுவேன். இதுதான் முதலும் கடைசியுமான எச்சரிக்கை.

அதற்குப் பிறகு யாரும் எந்த சத்தமும் போடவில்லை.

அரைமணி நேரத்தில் சடங்குகள் முடிந்தன. கருப்பு வேஷ்டியில் அக்காள் சொர்ணலக்ஷ்மியை எடுத்துப் போட்டு காட்டுக்குப் போய் சுந்தரேசன் எரியூட்டி வைத்தார். போலீஸ்காரர்கள் அவள் புருஷனை சிறைக்குத் தள்ளிக் கொண்டு போனார்கள். அவனைப் பற்றி இப்போதைக்குக் கவலை இல்லை.

சுந்தரேசன் சௌதாமினியைப் பற்றிக் கவலைப் பட்டார். அவள் கோபம் அவருக்கும் பயமாக இருந்தது. அதைக் கண்டிக்க முடியாது. அதே சமயம் பாராட்டவும் கூடாது.

நீ கோபப்படுகிற போது உன் கோபத்தை உற்றுப் பார் என்று சொல்லவேண்டும். இப்படி சொல்வது எளிது. ஆனால், உற்றுப் பார்ப்பது கடினம்.

ஒரு இருபத்தோரு
பெண் குழந்தையிடம் எப்
பேசுவது, என்ன பேசுவது
சரியாக விளங்கவில்லை.

அக்காவின் ஆத்மா சாந்
டைய ஆசார வகையிலனைசட
களை விட்டுவிட்டு தினமு
முப்பது பேருக்கு வெவ்வே
திசையிலுள்ள ஏழை எளிய
ளுக்கு அன்னதானம் செய்தா

சௌதாமினி அதில் முழு
சாதப் பங்கேற்றாள். கய் நறு
சாதம் வடித்து, பெரிய பாத்திரத்
போட்டுக் கிளறி காரில் கொண்
போய் சேரி வாசலில் இறக்கி
விகளுக்கும், குழந்தைகளுக்
அள்ளி அள்ளிக் கொடுத்தாள்.

பதிமூன்றாம் நாள் வீடு சுத்
கியது. இழைக்கோலம் போடப்
டது. இனிப்புகள் செய்யப்பட்
துக்கம் கேட்டவர்கள் வீட்டுக்
அனுப்பப்பட்டன. பலமா
விருந்து நடந்தது. இரவு ஹரிக
காலட்சேபம் நடந்தது.

எல்லாம் முடிந்தபிறகு எதாவ
நல்லதாய் பேச என்று சொல்ல

சுந்தரேசன் தனது தமக்
சொர்ணலக்ஷ்மியின் உத்தரவுப்
தான் தன் தம்பிக்கு சௌதா
னியைத் திருமணம் செய்
கொடுக்கப் போவதாய் சபை
நடுவே அறிவித்தார்.

"ரொம்ப அபாரமா

■

**தினமும் முப்பது பேருக்கு வெவ்வேறு திசையிலுள்ள ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்தார்.**

■





யாசனை. இந்தப் பத்து நாளும் இந்தக் குழந்தை
ன்ற வேலைகளை நான் பார்த்துண்டே இருந்தேன்.
ன்னலட்சுமி மாதிரி காண்டியம் கையுமாவே அலைஞ்
ண்டிருந்தா. அந்த ஜனங்கள மேலே விழுந்து இம்சை
ன்னாபோதும் கோபமே படலை."

"கோபம் அப்பா மேலதான். சௌதாமினிக்குக்
கல்யாணம்னா கேக்கறதுக்கு சந்தோஷமா இருக்கு.
இந்தத் தம்பிகொடுத்து வச்சிருக்கணும்." யாரோ
சொன்னார்கள்.

"ஒரு நெருங்கிய உறவு நீட்டி முழக்கியது. சௌதா
மினி மாதிரி பொண்ணு கிடைக்க கொடுத்து வச்சிருக்
கணும்."

"சௌதாமினியை சம்மதம் கேட்க வேண்டாமா?"
மனோன்மணி முணுமுணுப்பாய் பேசினாள்.

"சொந்த மாமனைக் கல்யாணம் பண்ணிக்கக் கசக்
குதா. இவனைக் கல்யாணம் பண்ணிண்ட அதிர்ஷ்டம்
அவனும் சுந்தரேசன் மாதிரி உசந்துட்டு போறான்."

"சுந்தரேசன் கிட்ட இருந்தா உசர முடியாது. தனியா போனாதான் உசரலாம்."

"எதுக்கு ஒத்துமையா இருக்கற அண்ணனையும், தம்பியையும் பிரிக்கிறேள். ரெண்டு பேரும் ஒன்னா இருக்கட்டுமே. ஒன்னா இருந்து உசரட்டுமே.

ராமசந்திரன் இந்த நேரத்தில் மிக அபத்தமாய் ஒரு வார்த்தை பேசினான்.

எங்கண்ணாவ விட்டு நான் போகமாட்டேன். என்னைக் கொன்னாலும் சரி. இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்.

அத்தனை பெரிய வார்த்தை அங்கு தேவைப்பட வில்லை. தேவைப்படாத நேரத்தில் தேவைப்படாற வார்த்தை சொல்வது வியாபாரிக்கு அழகல்ல. ஒரு புரோக்கர் பேச்சை முதலாகக் கொண்டவன். அவன் பேச்சு ஆணித்தரமாக இருக்க வேண்டும். அர்த்தம் நிறைந்

தாக இருக்க வேண்டும்.

ராமசந்திரனின் இந்தப் பேச்சு சபையில் ... லைப் கொடுத்தது. அவன் பேசியது குழந்தைத்தன... இருந்தது.

சௌதாமினி அவனை அலட்சியமாகப் பார்த்த... சௌதாமினி அலட்சியமாகப் பார்ப்பதை சந்தரேச... பார்த்தார். கவலையானார்.

பேச்சில் தெளிவில்லாதவனை எந்தப் பெண்ணு... அலட்சியம் செய்வது இயல்பு. பேச்சில் அசடு வழிபவனை... அலட்சியம் செய்வதுதான் பெண்களின் வழக்கம்.

ஆனால், இவன் ஏன் இவ்வளவு முட்டாள்தனமாக... பேசுகிறான். இவனுக்கு ஏன் மௌனமாக இருக்கத் தெ... யவில்லை.

தன்னைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தெரிந்து... இவன் எழுந்து போயிருந்தால் கம்பீரமாக இருந்திருக்கு... இவனிடம் ஏதோ ஒரு தடுமாற்றம் இருக்கிறது. அது என்ன... என்று கண்டுபிடிக்க வேண்டும். எதனால் என்று பார்... வேண்டும். இதுவரை இவனை உற்றுக் கவனிக்காம... விட்டுவிட்டோம். இவனுக்குக் கற்றுக் கொடுப்பது... நினைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர இவன் கற்று... கொண்டானா என்று நாம் பார்க்கவேயில்லை. இனிமே... இவனைத் தொடர்ந்து கவனித்து வர வேண்டும். அடிக்க... பரீட்சை வைக்க வேண்டும்.

இந்தப் பெண்ணுக்கு இவன் புருஷனாவதற்கு முன்... இவனை வலிவுள்ளவனாய் மாற்றிவிட வேண்டும்... இப்போது இவன் உளறியதும் ஒருவகையில் நல்லது தான்... இவன் மீது என் கொக்கி விழுந்து விட்டது. இப்போது... பேச்சை திசை மாற்றிவிட வேண்டும்.

சௌதாமினியை ராமசந்திரனுக்குக் கொடுப்பதில் யாருக்காவது எதிர்ப்பு இருக்கிறதா என்று பார்க்க... வேண்டும். நேரடியாய் பேசிவிட வேண்டும்.

“சௌதாமினியை ராமசந்திரனுக்குக் கல்யாணம்





பண்ணித்தரப் போறேன். யாருக்காவது ஆட்சேபணை உண்டா. இது நான் எடுத்த முடிவு இல்லை. எங்கக்காவோட கட்டளை.

“சௌதாமினிக்குப் பிடிக்கணுமேன்னு கேட்டேன். சௌதாமினிக்குப் பிடிக்கும். நீ கவலைப்படாதே. நான் சூட்சமமா இருந்து இந்தக் கல்யாணத்தை நடத்தி வைப்பேன்னு அக்கா சொல் விட்டா.”

“சௌதாமினி - ராமசந்திரன் கல்யாணம் முடிவான விஷயம். இருந்தாலும், உங்க அபிப்பிராயத்தைக் கேட்கறதுக்காக இதை சபையிலே சொல்றேன்.”

“புள்ளையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டறீர்.” சட்டென்று ஒரு எதிர்ப்புக் குரல் கிளம்பியது.

சந்தரேசன் இதை எதிர் பார்த்தது போல் இருந்தார்.

“யாரு... கனகாவா...?”

■

**ஒரு ஐம்பது வயதுக் கிழவியைப் பார்த்து மறுபடி சிரித்தார்.**

■

ஒரு ஐம்பது வயதுக் கிழவியைப் பார்த்து மறுபடி சிரித்தார்.

“ஆமா. நான்தான். என் தம்பியை ஜெயிலுக்கு அனுப்பிச்சுட்டு இங்கக் கல்யாணம் என்ன வேண்டிக் கிடக்கு. அவனை மீட்டுண்டு வர வழியைப் பார்க்க வேண்டாமா?”

"எங்கப்பா இங்க ஒன்னும் வரவேண்டாம்" செள
மினி இடையே சீறினாள்.

"அத்தை... ஒரு மரியாதைக்காக உன் அபிப்பிராய
கேட்டா, அவ்வளவுதான். இந்த வீட்டுல எங்களைப் ப
நீ முடிவு பண்ண முடியாது. அதனால பேசாம இரு."

அடுத்தவள் மரகதமணி கேட்டாள்.

"நீ சும்மா இருடி. நீ சின்னக் குழந்தை. உனக்கு ஒன்னு
தெரியாது."

மரகதமணியின் அத்தை அவளை மிரட்ட மரகதம
எழுந்து நின்று கொண்டாள்.

"நீ சும்மா இரு. நாங்க என்ன கஷ்டப்பட்டோம்
உனக்குத் தெரியுமா. தெரிஞ்சா நீ இப்படிப் பேசுவியா. ஒ
நல்ல அப்பா வேணும்னு நாங்க எவ்வளவு ஏங்கியிருக்கோ
தெரியுமா?"

"என் தம்பி நல்லவன்தாண்டி. ஆனா என்னவோ
போறாத காலம் கிரஹகக் கோளாறு. அவனைப் படுத்தி
எடுக்கறது."

"சௌதாமினியை ராமசந்திரனுக்குக் கல்யாணம்
பண்ணித்தரப் போறேன். இதைப் பத்தி ஏதாவது அபிப்பி
ராயம் உண்டா."

"இன்னும் நல்ல இடமாப் பாக்கலாம்."

"ஏன்?"

"சௌதாமினி அம்மா சாகும்போது என்ன மனநிலை
யில இருந்தாளோ... ஒரு தெளிவில்லாத பொம்மனாட்டி
சொல்றதைக் கேட்டு சௌதாமினி வாழ்க்கையைப் பாழ்ப
டுத்தணுமா?"

இப்போது சௌதாமினி ஒரு தவறு செய்தாள்.

"என் கல்யாணத்தைப் பத்தி நீங்க பேச வேண்டாம்.
அத்தை எங்க மாமா யாரைச் சொல்றாரோ அவரைத்தான்
நான் கல்யாணம் பண்ணிப்பேன். எப்ப சொல்றாரோ
அப்பத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். அவன்



முட்டாளோ முடவனோ அதைப் பத்தி எனக்கு அக்கறையே
இல்லை."

"அப்ப அபிப்பிராயம் எதுக்கு கேட்கறேள்" வேறொரு
உறவு கண்டித்தது.

"இந்தக் குழந்தைகள இப்படிப் பேசணும். அதை
நீங்க கேட்கணும்னு தான். இதுல உங்க அபிப்பிராயம்
எதுவும் முக்கியமில்லைன்னு தெரிஞ்சுக்கத்தான்.
என்னை ஏன் கேட்கலைன்னு நாளைக்கு நீங்க சொல்லக்
கூடாதுங்கறதுக்குத்தான். கல்யாணத்தை மனுஷாளா
தீர்மானம் பண்றா. தெய்வம் தீர்மானம் பண்றது."
இன்னொரு உறவு சிணுங்கியது.

"தெய்வமா ஆளவ தீர்மானம் பண்ணிட்டா. வேற ஒரு
அபிப்பிராயமும் வேண்டாம். இதைச் சொல்லத்தான்
இப்போ பேச்சு."

"நீ கார் புரோக்கர். நீ பேசறதுக்கு கேட்பானேன். உன்
தம்பியைக் காலுங்கீழயே வச்சுண்டா ஒன்னும் சரியா
வராது. அவன் சுயமா தொழில் ஆரம்பிக்கட்டும். அப்ப
கல்யாணத்தைப் பத்தி பேசு. இல்லைன்னா அவனை
யெல்லாம் சௌதாமினியால சமாளிக்க முடியாமப்
போயிடும்."

"சௌதாமினி மாதிரி கெட்டிக்காரப் பெண்ணைக்
கல்யாணம் பண்ணிக்கணும்னா நிறைய சம்பாதிக்கணும்.
இல்லைன்னா உன் தம்பி சௌதாமினிக்கு புடவை தோச்சு
போட்டிட்டிருக்கணும்." முதலில் பேசிய அந்த அத்தை
போர் தந்திரத்தை மாற்றினாள்.

எதிர்ப்பு எடுபடவில்லை என்றதும் பயம் காட்டினாள்.
எதிர்காலம் பற்றி கலவரம் காட்டினாள். இணைய வேண்டி
யவர்களை மனசால் பிரித்துப் போட்டாள்.

தம்பியின் முகம் மாறுவது சந்தரேசனுக்குத் தெரிந்
தது.

"அட முட்டாளே... நாம் ஒருவரிடம் அபிப்ராயம்
கேட்பது அவர்களைப் புரிந்து கொள்ளத்தானே ஒழிய நாம்
கலவரப்பட அல்ல.

"ராமசந்திரா, போய் கார
சௌதாமினியை, மரகதமணியை
கோவிலுக்குக் கூட்டிண்டு போ
இன்னிக்கு கோவிலுக்குப் போ
ணும். போயே ஆகணும்."

சுந்தரேசன் மெல்ல சபையை
கலைத்தார். விருந்தினர்க
வெளியேறினார்கள். பெண்க
இருவரும் கார் ஏறி கோவிலு
குப் போனார்கள். சுந்தரேச
மனைவி அவர் அருகில் வந்
உட்கார்ந்தார்.

"ஒன்னு சொல்றேன். தப்பு
எடுத்துக்காதீங்கோ. நாம யாரையு
பகைச்சுக்க வேண்டாம். நம்ம
பக்கத்து பலவீனத்தை அவ
பயன்படுத்திக்கக் கூடாது."

"நம்ம பக்கம் என்ன பலஹீனம்
ராஜம்."

"உங்க தம்பிதான்."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"வீட்டுக்கு ஒரு மொட்டைக்
கடுதாசி வந்தது. அந்த மொட்டைக்
கடுதாசில உங்க தம்பி ஏதோ
லேடீஸ் மேட்டர்ல மாட்டிண்டிருக்
கான்னு எழுதிருக்கு. உங்கக்கா
செத்துப் போய் நாலாம் நாள் இந்த
லெட்டர் வந்தது. அப்புறம்
பார்த்துக்கலாம்னு எடுத்து யார்
கண்ணுலயும் படாத மடிச்சு
வச்சுண்டிருக்கேன்."

சுந்தரேசன் அந்தக் கடிதத்தை
வாங்கிப் படித்தார்.

■

**அந்த மொட்டைக் கடுதாசில உங்க தம்பி ஏதோ லேடீஸ் மேட்டர்ல மாட்டிண்டிருக் கான்னு எழுதிருக்கு.**

■





அந்தக் கடிதத்தைத் தொடும்போதே இந்தத் திருமணத்தில் பல சிக்கல்கள் எழும் என்று தோன்றியது.

சுந்தரேசன் கவலையானார். கடவுளே என்று நெட்டு யிர்த்தார்.

கடிதம் மிக ஆபாசமான தமிழில் எழுதப்பட்டிருந்தது. வல்லின, மெல்லின தவறுகள் இருந்தன. தம்பியைப்பற்றி இருந்தாலும் சுந்தரேசனை நோக்கி குறி வைத்திருந்தது.

"உன் குலம் மானம் கெடுக்க உன் தம்பி கங்கணம் கட்டி ஆடிக் கொண்டிருக்கிறான் உன் தம்பிக்கு ஒழுங் காகத் திருமணம் செய்து வைக்காவிட்டால் உஷார்... உஷார்..."

முட்டாள்தனமாக எழுதப்பட்டிருந்தது. ஒரு சிறிய கோபத்துடன் அதைக் கிழித்துப் போட்டான்.

"அடடா... அதை ஏன் கிழிக்கிறேள்."

ஏன்... என்ன சமாச்சாரம். எதுக்கு இது"

"எழுதினது யாருன்னு கண்டுபிடிக்கலா மோன்னோ."

"எப்படி கண்டுபிடிப்பே ராஜம்."

"உங்க தம்பிதான் எழுதியிருப்பானோன்னு எனக்கு ஒரு சந்தேகம். அவனை உஷார்... உஷார்னு... எழுத வைச்ச எதுக்குடா இப்படியெல்லாம் பண்றேன்னு கேட்க லாம்னு நினைச்சேன்."

"இதெல்லாம் அவன் பண்ண மாட்டான் ராஜம். இது பண்றதுக்கு புத்திசாலித்தனம் வேணும். இந்த மாதிரி புத்திசாலித்தனம் அவன்கிட்ட கிடையாது."

"அப்ப வேற யார் பண்ணிருப்பா. கண்டுபிடிக் கணும்."

"இதை முக்கியமான விஷயமா நீ எடுத்துக்க வேண்டாம். சௌதாமினிக்கும், மரகதமணிக்கும,

வீட்டுவேலை, சமையல் எல்லாம் சொல்லிக் கொ
அந்தக் குழந்தைகள் மாட்டேன்னா எங்கி
சொல்லு.''

''விரட்டாத சொல்லித்தா ஆரம்பிச்சுட்டேனே. அ
ளுக்கும் கத்துக்கனும்னு ஆசை இருக்கு. அந்தக் கு
ழந்தைகள் பத்திக் கவலையே இல்லை. உங்க தம்
பிகிட்டத்தான் ஏதோ ஒரு அசட்டுத்தனம் இருந்துண்ணே
இருக்கு.''

''அவன் மேல ஒரு கண்ணு வச்சுக்கோ ராஜம். நா
விழிப்பா இருக்கேன்.''

சட்டென்று வீட்டிலுள்ள எல்லார் மனதிலும் கவலை
புகுந்து கொண்டதை சுந்தரேசன் உணர்ந்தார்.

இரண்டாயிரம் வருஷத்து பெருமாள் கோயி
அது. எத்தனை எத்தனையோ ஆண்களும், பெண்களு
நடந்து போன தரை அது. அந்தக் கருங்கல் வழவழப்
மதில் சுவரின் திண்மை சௌதாமினியைப் பரவசப்படு
கிற்று.

கூட்டமில்லாத அந்த இரவுப் பொழுதில் மீசை
வைத்த பெருமாள் பார்த்தசாரதி முன்பு சௌதாமினி
கரம் குவித்து நின்றாள். அழகன், நெடுமாலன், க
பிரான், செளம்யன், செளலப்யன் என்று கடவுளைப்
புகழ்ந்து சொன்ன பல வார்த்தைகள் நினைவுக்கு
வந்தன.

உண்மையில் இந்த வார்த்தைகள் எதுவும் கடவுளை
குறித்து சொல்லப்பட்டவை அல்ல. இவையெல்லாம்
தாண்டின பிரம்மாண்ட வஸ்து கடவுள். அது விவரிக்க முடி
யாத விஷயம். சொல்லுக்கு அடங்காத பொருள். மனித
களுக்காகத் தான் கடவுளை மனிதன் போல பொம்மை
செய்திருக்கிறார்கள்.

நாலு புஜங்கள் கொண்ட வலுவுள்ளவனாக இரு
இரண்டாள் சாமர்த்தியத்தோடு இரு. நான்கு பே
யோசிப்பதைப் போல ஒரு விஷயத்தை யோசி. அதனால்





■

ஒரு
கல்லைப்
புரட்டி
குகையைத்
திறந்து ஒரு
கிராமத்தையே
அந்தத்
தேரோட்டி...

■

பாலகுமாரன்

தான் நான்கு தலைகள் கொடுக்கப்பட்டிருந்தது என்பதைப் புரிந்துகொள்.

இந்த உருவகங்கள் எல்லாம் உவமானங்கள், உவமைகள்.

தேர் ஓட்டி ஒரு பெரும்யுத்தம் நடத்திய கெட்டிக்காரனை இந்த சமூகம் கடவுள் என்று உருவகப்படுத்திவிட்டது. அவன் பேச்சு, சிரிப்பு, பாட்டு எல்லாவற்றையும் கதையாக்கிவிட்டது.

மிகப்பெரிய வெள்ளம் வந்தபோது ஒரு கல்லைப் புரட்டி குகையைத் திறந்து ஒரு கிராமத்தையே அந்தத் தேரோட்டி காப்பாற்றியிருக்க வேண்டும்.

கண்ணன் மலையைத் தூக்கி எங்களை காப்பாற்றி விட்டான். வெள்ளத்தில் அழியாமல் எங்கள் செல்வங்களான மாடு, கன்றுகளை அவன் பாதுகாத்தான் என்று சற்று அதிகமாகக் கூறியிருப்பார்கள்.

எப்படி கொல்வது என்று அந்த அரசகுமாரன் தவித்தபோது மனது மயங்காதே விட்டால் உன்னைக் கொன்று போடுவார்கள். நீ ஆயுதத்தைக் கீழே வைத்தாலும் உன்னைக் கொன்று போடுவார்கள்.

சாவு என்கிற விஷயத்துக்கு மிக அருகே வந்துவிட்டாய். எனவே,

போர் செய். எழுந்திரு. குந்தியின் மைந்தா வா
உனக்கு வாய்ப்பு. வேறு எதும் கொடுக்கவில்
என்று அமைதியாய் உபதேசம் செய்திருக்கிறான். அ
அலங்காரமான சோகம் ஆக்கிவிட்டார்கள். அ
புத்தகமாக்கிவிட்டார்கள். காலப்போக்கில் எல்
அப்படித்தான் மாறும். வெறும் கூரான கல் என்
ஆயுதம். அணுகுண்டு என்கிற வடிவம் பெற
லையா.

இந்த பார்த்தசாரதி கீதன். பயமில்லாதவன். அதேசம
முரடன் அல்ல. மிக நல்லவன். எல்லாரிடமும் சிரி
சிரிக்க பேசுகிற செல்லப்பன்.

இந்த வீரனைப் போல இரு. முரடர்களை அ
நல்லவர்களைக் காப்பாற்று. மனிதன் ஒரு நல்
ஆண்மகனுக்குச் சொன்ன விஷயங்கள் தான் கோயி
களில் கடவுளாக இருக்கின்றன. பெண்ணுக்கு
அதேவிதமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிற
சிரித்தபடியே இரு. செல்வத்தைக் காத்திரு. வா
செல்வை நீ கவனித்துக் கொள். நீ இல்லாமல் ஆ
இல்லை. ஆண் சிவம். நீ சக்தி. ஆண் முயற்சி. நீ தூண்ட
சரியான முறையில் தூண்டினால் தான் சரியனப
செய்கை வரும்.

ஆண் ஒரு அசையாத கல். அதை உந்தித் தள்
ளால் ஒரு இடத்தைப் போய் தாக்குகிறது. அந்த உந்
தல் பெண் இரண்டு பேருமே உந்தி தள்ளி இரண்டு
பேருமே முந்திக் கொள்ள முடியாது. ஒரு பல் சக்கரத்தில்
ஒரு பல் மேலே இருந்தால் ஒரு பல் கீழே இருக்கும்
எல்லா பல்லும் மேலே இருந்தால் அது சக்கரமல்ல.
சுழற்சி என்பது முடியாது. கீழே இருப்பதும் மேலே வரு
வதும் மாறி மாறி நடக்கும். எதுவும் இழிவல்ல. எதுவும்
தாழ்வில்லை.

தத்துவம் பற்றி அறிவில்லாதவர்கள் தான் மதம் பற்றி தவறாக புரிந்து கொள்கிறார்கள். தத்துவம் அறிவு ஜீவித்தனமானது. மதம் பாமரத்தனமானது. இரண்டுமே



சியம் எல்லோருமே அறிவு ஜீவியாக இருந்து
முடியாது. எல்லாருமே பாமரர்களாய் வாழவும்
முடியாது.

மனிதனை உற்சாகப்படுத்தும் வகையில்தான் எல்லா மதத்திலும் பூஜைகளும் சடங்குகளும் நடைபெறுகின்றன.

ஆனால், கோவிலைப் புரிந்து கொள்ள நிறைய பேருக்குத் தெரியவில்லை. ஏன்... கருங்கல் தூண்கள், ஏன்... இத்தனை உயர கோபுரம். ஏன்... இந்தத் தங்க
விமானம். ஏன்... எல்லாம் பிரம்மாண்டமாய் இருக்கின்றன. மனிதனை அற்பமாய் காட்ட இவ்விதம் அமைத்திருக்கிறார்கள். நீ தூசு என்று சொல்லாமல் சொல்கிறார்கள்.

உனக்கு இருபத்து மூன்று வயது. எனக்கு ரெண்டாயிரத்து முன்னூறு வயது என்று இந்தக் கோயில் சொல்லாமல் சொல்கிறது. இங்கே, பல்லவர்களும், சோழர்களும், சேரர்களும் மிக மிக அற்புதமான ஆச்சார்ய
ளும் வணங்கிப் போயிருக்கிறார்கள் என்ற ஒரு மரியாதையை இந்த இடம் கொடுக்கிறது. யார் யாரோ வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். நீயும் அவ்விதமே என்று இடைவிடாது அறிவுறுத்துகிறது.

இது மனதுக்குள் சரியானபடி தைத்தால் கூச்சலிட எதுவுமில்லை. கும்மாளமிட எதுவுமில்லை. ஒரு அமைதிப் படிமானம் ஏற்படுகிறது.

சௌந்தர்யினி கோவிலை முழுமையாக அனுபவித்து ஒரு மண்டபத்துப் படிகளிலே அமர்ந்து கொண்டாள்.

"ஏதாவது சாப்பிட வாங்கிண்டு வரட்டுமா..." ராமசந்திரன் பேண்ட் பாக்கெட்டுக்குள் கைவிட்டபடி கேட்டான்.

"சரி" தலையாட்டினாள்.

"என்ன வாங்கிண்டு வரணும்."

''எதாவது...''

''இனிப்பா... காரமா...''

''எதாவது...''

அவன் போய் மூன்று லட்

புளியோதரைப் பொட்டலங்க

வாங்கி வந்தான்.

மரகதமணிக்கு பசிபோ

மிக ஆவலாய் லட்டு சாப்பிட்ட

மிக வேகமாய் புளியோத

உண்டாள்.

''டக்கரா இருக்குல்ல புளி

தரை'' பரவசப்பட்டாள்.

''இங்க நல்லாயிருக்கு

தெரிஞ்சுதான் கேட்டே

இன்னும் ரெண்டு பொட்ட

வாங்கியாரவா.''

''வேண்டாம். வேணும்னா

பொட்டலம் சாப்பிடட்டும். செ

தாமினி தன் புளியோதரை

பொட்டலங்களை மரகதம

யிடம் கொடுத்தாள்.

''வீட்டுக்கு வாங்கிண்டு

போலாமா''

''வேண்டாம்'' மறுப

மறுத்தாள்.

''இல்ல... வாங்கிண்டு வந்

டறேன். அவன் வேகமாக விற்

மிடம் நோக்கி ஓடினான்.

புளியோதரை ஆயிடுத்து சா

தொலைவே பேச்சுக்குரல் கே

டது.

■

**சௌதாமினி கோவிலை முழுமையாக அனுபவித்து ஒரு மண்டபத்துப் படிகளிலே அமர்ந்து கொண்டாள்.**

■



''அங்க ரெண்டு பாக்கெட் வச்சிருக்கீங்களே... கொடுங்

கோன்.''

''அது வேற ஒருத்தருக்கு சார்''

''கொடுங்க பரவாயில்லை''

''முடியாது சார்''

''அதைக் கொடுய்யா''

''புளியோதரை ஆயிடுத்து. நோ ஸ்டாக்.''

''புளியோதரை கொடுன்னா இங்கிலீஷ்லயா பேசறே.''

அந்த மத்திம வயது ஆளை முகத்தில் கைவைத்து

மசந்திரன் தள்ளினான். உள்ளே தாண்டிப் போய்

ந்த ரெண்டு புளியோதரைப் பொட்டலங்களை

த்தான். தள்ளப்பட்டவர் எழுந்து புளியோதரையைத்

டிவிட்டார்.

பொட்டலம் எகிறி தரையில் விழுந்து சிதறியது.

ணாகியது.

ராமசந்திரன் கோபமானான். பளீரென்று அவரை

றைந்தான்.

அவரும் கோபத்தில் கைவீசினார். அவன் முதுகில்

த்தினார்.

இரண்டு நிமிட நேரத்தில் மூன்று கோவில் ஆட்க

ளாடு ராமசந்திரன் தனியாய் குஸ்தி போட்டான்.

டித்தான். அடிவாங்கினான். இரண்டு பெண்

ளுக்கு முன்னால் தீரம் காட்ட வேண்டுமென்று தீரம்

காட்டினான்.

சௌதாமினி என்ன செய்வது என்று தெரியாமல்

கைத்தாள். ராமசந்திரனின் முட்டாள்தனத்தைக்

கண்டு அதிர்ந்தாள். அந்த இடத்துக்குப் போவதா,

வேண்டாமா என்று தயங்கினாள். இப்போது சண்டைக்கு

அருகில் போனால் மறுபடி இந்தக் கோவிலுக்கு வரமுடி

யாமல் போகும். ராமசந்திரனை விட பார்த்தசாரதி

கோவில் முக்கியம். இந்த அமைதி முக்கியம். இந்தப் புளி

யோதனையைப் போல் இந்த சண்டையும் தேவையி[...] தது.

ராமசந்திரன் ஏன் இவ்வளவு முட்டாளாக இருக்கி[...] பெண்களுக்கு இது எவ்வளவு சிரமம் என்று ஏன் [...] யாமல் இருக்கிறான். இது வீரதீர சாகசம் என்று நினை[...] விட்டானா; கோவிலில் மற்றவர்களும் சண்டையைப் [...] கேள்விப்பட்டு ஓடிவந்தார்கள்.

யார் அவன்? யார் அவன்? என்று தேடினார்கள்.

ராமசந்திரன் கால் அகட்டி நின்று கொண்டான். கராத்[...] போல் கொடுத்தான். அவர்கள் பயந்தார்கள். சிலர் சம[...] னப்படுத்தினார்கள்.

சரி... புளியோதரை அவருக்குமில்லை. இவருக்கு[...] மில்லை. பூமாதேவிக்கு போயிடுத்து.

''எம் மேலயே கைவச்சே... அயோக்கிய பட[...] அடிபட்டவர் எகிறி வர அவரை அணைத்து[...] கொண்டார்கள்.

ராமசந்திரனைப் போயிடுங்க சார்... போயிடுங்க சா[...] என்றார்கள்.

ராமசந்திரன் வேகமாய் வெளியேற சௌதாமினியு[...] மரகதமணியும் அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

குட்டிகளைத் தள்ளிட்டு வந்திருக்கான் பா[...] அதான் டாவ் காட்டறான். ஒரு அப்பாவி ஆள் மே[...] கராத்தே வேலையெல்லாம் காட்டறான். மூஞ்சி பார்த்தாலே தெரியுதே பொறுக்கின்னு. இந்த லேடீஸாவது தடுக்கக்[...] டாது.''

அவ்வளவுதான் சௌதாமினிக்குக் கேட்டது.

ராமசந்திரன் கார் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

''நம்மக்கிட்டயே வாலாட்டறான்க. புளியோதரை வி[...] றதுக்குத்தானே... கொடுக்க வேண்டியது தானே.''

சௌதாமினி அவனை வியப்போடு பார்த்தாள்.

இந்தப் பைத்தியத்தை எப்படி கல்யாணம் செய்[...]



■

''பிளட் வருதா பாரு'' அவன் கன்னத்தை மரகத மணியிடம் காட்டினான்.

■



கொள்வது?

உள்ளே யோசனையில் திணறினாள்.

''இங்க பிளட் வருதா பாரு'' அவன் கன்னத்தை மரகதமணியிடம் காட்டினான்.

''ஆமா... நகம் பட்டிருக்கு.''

அவன் மறுபடி காரை நிறுத்தினான்.

''இறங்கிப் போய் அவன் மூஞ்சில குத்திட்டு வரேன்.'' கார் கதவு திறந்தான்.

''டேய்... முட்டாள்...'' சௌதாமினி கத்தினாள்.

''வண்டியை ஓட்டு'' அதட்டினாள்.

அவன் திரும்பி அவளை முறைத்தான்.

''இந்த முறைப்பெல்லாம் வேற எங்கனா வச்சுக்கோ. எங்கிட்ட நடக்காது. வண்டி எடுடா.''

''என்ன அடா புடாங்கற...''

''எனக்கு வர்ற கோவத்துக்கு உன்னைக் கொலை பண்ணிடுவேன். வண்டி ஓட்டு.''

''என்னடி எகிற...'' அவனும் ஏக வசனத்தில் இறங்கினான்.

''மரகதமணி, நீ கீழ இறங்கு'' சௌதாமினி கீழே இறங்கினாள்.

இரண்டு பேரும் காரை விட்டு இறங்கி நடந்தா கை தட்டி ஆட்டோவை நிறுத்தினார்கள்.

"வீட்டுக்கு மேல பத்து ரூபாய் தரேன்." சௌ மினி இடிச் சொன்னாள். ஆட்டோவில் தாவி உட்கா தாள்.

"உங்கிட்ட காசு இருக்காக்கா."

"வீட்ல வாங்கிக் கொடுத்துரலாம்."

ஆட்டோ கிளம்பி வீடு நோக்கிப் போயிற்று.

சௌதாமினி உள்ளே நுழைந்ததும் சந்தரேசனிட விஷயம் சொன்னாள்.

சந்தரேசனுக்குக் கோபம் வந்தது. அவர் மனைவி ராஜு அருகில் வந்தாள்.

"இப்போ விசாரிக்க வேண்டாம். நீங்க கோபத்து இருக்கேள். நாளைக்கு விசாரிப்போம். தயவு செய்து நா சொல்றதைக் கேளுங்கோ" சந்தரேசனின் கோபத்தை அட கினாள்.

சௌதாமினி தன் அறைக்குப் போய் படுத்து கொண்டாள்.

கார் எடுத்து வீடு வரை வந்தவன் பெண்கள் இரு வரும் வந்துவிட்டார்கள் என்பதை வேலைக்காரன் மூலம் தெரிந்து கொண்டான். ராமசந்திரனுக்குப் பெண்களைப் பற்றிய கவலை நகர்ந்து போய் கோபம் மேலெழுந்தது.

அவன் காரை சுசீலாவின் வீடு நோக்கி ஓட்டினான். ஒரு லட்டும் ஒரு புளியோதரையும் அவனுக்கு அருகே இருந் தன.

காரை வழியில் நிறுத்தி ஒரு பந்து மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டான். இன்னொரு கடையில் நிறுத்தி சுசீலாவுக்குப் பிடித்த சாக்லேட்டுகள் வாங்கிக் கொண்டான். இன்னும் வேறெதாவது வாங்க வேண்டுமா என்று ஒரு மளிகைக் கடையில் நின்று யோசித்தான்.



ஒரு கிலோ சர்க்கரையும் ஒரு கிலோ துவரம் பருப்பும் வாங்கிக் கொண்டான். மூன்று விதமான பிஸ்கெட்டுகள் வாங்கிக் கொண்டான்.

சுசீலாவின் வீடு அவனை அட்டகாசமாய் வரவேற்றது.

வீடு குப்பையாக இருந்தது. கொஞ்சம் பழைய துணி நாற்றமெடுத்தது. ஆனால், அம்மாவும் பெண்ணும் அதீதமாய் வெட்கப்பட்டார்கள். குழறிக் குழறிப் பேசினார்கள்.

"எனக்கு கையும் ஓடலை... காலும் ஓடலை" அங்குமிங்கும் பதட்டமாய் நடந்தார்கள். எட்டிப் பார்த்த பக்கத்து வீட்டுப் பெண்மணிக்கு சுசீலாவோட முதலாளி என்று சொன்னார்கள்.

"ஐயோ எதுக்கு இதெல்லாம்..." வாங்கிக் கொள்ள மறுத்தார்கள். பாய்ந்து வாங்கிக் கொண்டார்கள்.

"அம்மா... எனக்கு அப்படியே கிறுகிறுன்னு வருதும்மா..."

"நீ அப்படியே உக்காந்துக்கோ" அம்மா பெண்ணை ஆசுவாசப்படுத்தினாள்.

"நீங்க சொல்லிருந்தா நானே வந்துருப்பேனே..." பல முறை சொன்னாள்.

அவர்கள் பதட்டம் அடங்க சற்றுநேரமாயிற்று.

"மனசே சரியில்லை. சுசீலாவைப் பார்க்கணும் போல இருந்தது. பார்த்தா சந்தோஷமாவேன்னு தோணித்து. அதான் வந்தேன். நான் வந்தது தப்பில்லையே..."

"கடவுளே... இது உங்க வீடு. அப்படி மனசுக்கு என்ன கஷ்டம்."

அவன் கதவைத் திரும்பிப் பார்த்தான். சுசீலா எழுந்து போய் அதை ஒருக்களித்து சாத்தினாள்.

அவன் நாற்காலியிலிருந்து எழுந்து தரையில் போய் உட்கார்ந்தான். சுசீலா அவனுக்கு அருகில் போய்

உட்கார்ந்து கொண்டாள். அவன் உடம்பு வாசனை, குடி அவளுக்குப் பிடித்துப் போயிற்று.

நெருப்புத் துண்டமாய் ஜொலித்த சௌதாமினியின் கண்களுக்கு பதில் இந்த உபசாரணை, இந்தப் பேச்சு, இந்த நெருக்கம் மனம் அமைதி அடைய உதவியாயிருந்தன.

இந்த அன்புக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றிற்று.

"இது தங்கச் சங்கிலியா?"

"இல்லை. கவரிங்."

"நாளைக்கு உனக்கு தங்கச் சங்கிலி வாங்கித் தரேன். ஒரு நல்ல சங்கிலி இவ்வளவு தூரத்துக்கு வரணும்னா குறைஞ்சபட்சம் எத்தனை சவரன் ஆகும்."

அவன் மகளின் நடுமார்பைத் தொட்டு அம்மாவைப் பார்த்துக் கேட்டான்.

■

**அவன் மகளின் நடுமார்பைத் தொட்டு அம்மாவைப் பார்த்துக் கேட்டான்.**

■

"மூணு, மூணரை ஆகும்" அம்மா பதில் சொன்னாள்.

"இல்லம்மா... நாலு சவரன் ஆகும்."

"ஆமா. டாலர் ஒரு அரைச் சவரன், நாலு சவரன் ஆகும்."

"அஞ்சு சவரன்ல நான் ஒரு நகை வாங்கித் தரேன்."

அவன் அவர்களை விழி விரிய



வைத்தான்.

அவர்கள் இருவரும் அவனை நெருங்கி உட்கார்ந்தார்கள்.

"அப்படி என்ன துக்கம்?" என்று கேட்டார்கள்.

அவன் சௌதாமினியைப் பற்றி அவர்களிடம் விவரித்தான்.

அம்மாவும் பெண்ணும் ஒருவரையொருவர் வேகமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அவன் வீட்டுக்குத் திரும்பியபோது, அவன் எங்கு போனான், என்ன செய்தான் என்று யாருமே கேட்கவில்லை.

மறுநாள் அலுவலகத்திற்குப் போய் உட்கார்ந்தான்.

அண்ணா ஒவ்வொரு வியாபாரமாய் முடிக்க அவன் கார்களை வெளியே எடுத்துக் கொடுப்பதும் உள்ளே வைப்பதுமாய் வேலை செய்து கொண்டிருந்தான்.

"டேய்... இந்த காண்டஸா எப்படி இருக்குன்னு ஓட்டிப் பார்த்துட்டு வா" அண்ணா ஒரு சாவியைத் தூக்கிப் போட்டார்.

அவன் சுசீலாவுக்கு அருகே இருக்கிற இண்டர்காமை எடுத்துக் கொண்டான். தன்னை யாரும் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

"குண்டு... லஞ்சுக்குப் போறேன்னு தெரு முனைக்குப் போ. அங்க வந்து பிக்கப் பண்ணிக்கறேன். வெள்ளை காண்டஸா" நம்பர் சொன்னான்.

அவள் ஒரு கணம் திகைத்து விட்டு வெளியேறினாள்.

அவன் அண்ணாவை இண்டர்காமில் அழைத்தான்.

"அப்படியே சாப்பிட்டு வந்துடறேண்ணா... பசிக்கறது."

"சரி, கொஞ்சம் வண்டியை டிராங்க் ரோடல எடுத்துட்டுப் போ, ஸ்பீட் பாரு."

அவன் கேஷியரிடம் சொல்லி அறுநூறு ரூபாய் வாங்கிக் கொண்டான். உல்லாசமாய் வெளியே வந்தான்.

அந்த காண்டஸா கிளம்பின வேகம் தெருவில் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

சுந்தரேசனுக்கு அந்த வேகம் எதையோ சொல்லாமல் சொல்லியது.

ஆனால், அடுத்த டெலிபோன் அழைப்பு அதை மறக்கடித்தது.

அவன் சுசீலாவைக் கூட்டிக்கொண்டு மூன்று நட்சத்திர ஹோட்டலுக்குப் போனான். இரண்டு பேரும் ஒரு ஜான் உயரக் குடுவையிலுள்ள ஐஸ்க்ரீம் வரவழைத்து நிதானமாய் சாப்பிட்டார்கள். சிரித்துச் சிரித்துப் பேசினார்கள்.

மகாபலிபுரம் சாலையில் குழல் பறக்க ஓட்டினார்கள்.

அவர்கள் திரும்புகிறபோது மாலை நாலுமணி ஆயிற்று.

பிற்பகல் அந்தப் பெண் இல்லாததை சுந்தரேசன் மனதுக்குள் குறித்துக் கொண்டார்.

''காண்டஸாவை எங்கே ஓட்டிப் பார்த்தாய்'' என்று கேட்டார்.

அவன் மகாபலிபுரம் சாலை என்று சொன்னதும், சரி என்று சொல்லிவிட்டார்.

அரைமணி நேரம் கழித்து சுசீலாவை தனியே அழைத்தார்.

''புள்ளிக்காடுன்னு மகாபலிபுரம் பக்கத்துல ஏதாவது இடம் இருக்கா என்ன?''

''புள்ளிக்காடு இல்லை சார். புலிக்காடு. அங்க ஒரு நல்ல குகை இருக்கு சார்.''

''குகையா... உனக்கு எப்படி தெரியும்.''

''நேத்து... இல்லை முன்னால போயிருக்கேன் சார்.''

''அப்படியா... தாங்க்யூ...'' அவளை அனுப்பினார்.



■ சௌதாமினி தான் இவனை மேலே இழுத்துக் கொண்டு வரவேண்டும். அவன் இயலாமையைக் குற்றம் சொல்வதை ■

பாலகுமாரன்

''சரி... உங்கூடத்தான் போறானா. தப்பு உன் பேரிலயா... அவனா'' பின்னால சாய்ந்து யோசிக்க ஆரம்பித்தார்.

சௌதாமினியும் மரகதமணியும் நேற்று மாற்றி மாற்றிச் சொன்ன குற்றச்சாட்டுகள் கண்முன் வந்தன. சௌதாமினி அவனை அறவே வெறுப்பது போல் அவருக்குப் பட்டது. சௌதாமினி தான் இவனை மேலே இழுத்துக் கொண்டு வர வேண்டும். அவன் இயலாமையைக் குற்றம் சொல்வதை நிறுத்த வேண்டும். இல்லாது போனால், அவன் இப்படி எங்கேயாவது அலையத்தான் செய்வான். இப்போது முதல் வேலை இந்தப் பெண்ணிடமிருந்து இவனைப் பிரிக்க வேண்டும்.

சுந்தரேசன் வெகுநேரம் அமைதியாய் இருந்தார்.

கோளாவிலிருந்து ஐந்து கார்கள் சென்னைக்கு வரவேண்டியிருந்தன. தம்பியை உடனடியாக விமானம் மூலம் திருவனந்தபுரம் போகச் சொன்னார்.

அவன் அரைமணி நேரம் கழித்து வயிறு வலிக்கிறது என்று வந்து நின்றான்.

சர்ரென்று அவர் அவன்மீது எரிந்து விழுந்தார்.

அவன் முகத்தைத் தூக்கிச்

கொண்டு கிளம்பிப் போனான்.

ஒரு துப்பறியும் ஏஜென்ஸியை அணுகி அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்து வரச் சொன்னார்.

"ரொம்ப மோசமான ஃபேமிலி சார். ஒரு லெவல் விசாரிக்கறதுக்குள்ளயும் மூச்சுத் திணறிப் போச்சு. அடிதடி ரகளை. கண்டமேனிக்குக் கெட்ட வார்த்தை. எவனா மாட்டினா சப்ஜாடா தீர்த்தான்."

வேலை கொடுத்த மூன்று மணி நேரத்தில் ஏஜென்ஸி பதில் சொல்லியது.

சுந்தரேசன் வீட்டுக்கு போன் செய்து சௌதாமினியை அழைத்தார்.

"சௌதாமினி, உனக்கு ராமசந்திரனைத் திருமணம் செய்வது விருப்பமா இல்லையா. இல்லையெனில் தெளிவாகச் சொல்லி விடு. நான் வேறு இடம் பார்க்கிறேன்."

"ராமசந்திரன் அன்று நடந்து கொண்டது பிடிக்கவில்லை. அது தேவையில்லாத சண்டை."

"அதை மறந்து விடு. அவனைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன..."

"ராமசந்திரன் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்."

"நான் கற்றுக் கொடுக்கிறேன். இதுவரை அவனுக்கு எதுவும் கற்றுத் தரவில்லை. என் உதவிக்காகத்தான் அவனை வைத்திருந்தேனே தவிர அவனை வளர நான் உதவி செய்யவேயில்லை. அவனை இன்னும் ஒரு வருடத்தில் தயார் செய்துவிட முடியும்."

"என் மீது பிரியம் இல்லையோ என்று தோன்றுகிறது."

"உனக்கு அவன் மீது பிரியம் இருக்கிறதா?"

"என் மீது பிரியம் உள்ளவர்களைத்தானே நான் நேசிக்க முடியும்?"



"இதையே அவனும் சொல்லலாம் அல்லவா. நீ நேசிக்கவில்லை. அதனால் தான் நானும் நேசிக்கவில்லை என்று அவனும் பேசலாமல்லவா?"

ஒரு சண்டை சரியோ தவறோ நம்மாள் இறங்கி விட்டான் என்ற பிறகு அவன் பக்கம் தான் நிற்க வேண்டும். சண்டை முடிந்த பிறகுதான் கண்டிக்க வேண்டும். சண்டை நடக்கும்போது அதில் படாது நகர்ந்து கொள்வது நல்ல பண்பாடு அல்ல. நீ செய்த தவறு என்று பிறகு குத்திக்காட்டலாம். உடனே துணித்துக் கொண்டு வருவது உன் ஈரமற்ற தன்மையைக் காட்டுகிறது. நீ சுயநலமி என்று சொல்கிறது."

சுந்தரேசன் ஆங்கிலத்தில் அவளுக்கு மிருதுவாக உபதேசித்தார்.

அவள் நிதானமாய் புரிகிறது என்று சொன்னாள்.

"உனக்கு நான் வெளியே வரன் தேடலாம். அவன் ராமசந்திரனை விட அசடாய் இருந்தால் என்ன செய்வாய். ராமசந்திரன் உனக்குத் தெரிந்த பூதம். நீ அறிந்த ஆண். அவனோடு வாழ்க்கை எளிது. அவனை நீ இழப்பது உனக்கு நல்லதல்ல. நான் சொன்னதை யோசித்து விட்டு மூன்று நாட்கள் கழித்து என்னோடு பேசு."

ராமசந்திரன் வெளியூர் போனபிறகு இந்தப் பெண் சுசீலா ஆபீசுக்குத் தாமதமாக வந்தது. முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அலைந்தது. யாரோடோ வேகமாய் சண்டையிட்டது. தலைவலி என்று அரைநாள் லீவு கேட்டது.

சனி என்றதும் பன்னிரெண்டு மணிக்கே பையை எடுத்துக் கொண்டு போய்விட்டது.

சுந்தரேசன் அதை வேலையிலிருந்து விரட்டி விட வேண்டுமென்று தீர்மானித்தார். வந்தவுடன் சொல்லி விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். ஆனால், சுசீலா மறுநாள் அதற்கு மறுநாள் கூட

வேலைக்கு வரவில்லை.

ஐந்து ஊர்களுடன் நான்கு நாட்கள் கழித்து ராமசந்திரன் சென்னை வந்தான்.

"என் ஃப்ரெண்ட் ஒருத்தருக்கு உடம்பு சரியில்லை. பார்க்கப் போறேன்" என்று வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

இவனையும் ஒருநாள் விட்டுப் பிடிப்போம் என்று சுந்தரேசன் மௌனம் காத்தார்.

ஆனால், அன்று மாலையே அந்த வீட்டின் அமைதி கிழிந்து தொங்கியது.

"அண்ணா, நான் சுசீலாவுக்கு வாழ்வு கொடுக்கலாம்னு இருக்கேன். அவ ரொம்பவும் ஏழைப் பெண்."

ராமசந்திரன் பேச்சு ஆரம்பித்ததும் வீடு ஆடிப்போயிற்று.

கத்தி முகத்துக்கு நேரே வீசப்பட்டால் பயந்து விடக்கூடாது. அப்படி பயந்தால் இன்னும் வேகமாக வீசப்படும்.

"என்னடா உளர்றே..." சுந்தரேசன் மனைவி ராஜம் உரத்த குரலில் கத்திக்கொண்டு அவன் அருகில் வந்தாள்.

"சுயமா தின்னுட்டியா... இந்த உலகத்துல எல்லா முடிவும் நீயே எடுத்துருவியா... உனக்கு என்னடா

> ■
> **கத்தி முகத்துக்கு நேரே வீசப்பட்டால் பயந்து விடக் கூடாது. அப்படி பயந்தால் இன்னும் வேகமாக வீசப்படும்.**
> ■



தெரியும். நீ எதுலடா உசத்தி. அண்ணா சோத்தை வண்ணமா தின்னுட்டு நீங்களே பொண்ணு பார்த்துப் போடு... வாழ்வு கொடுப்போம். அப்ப இவ கதி... எதுக்கு இவனை வேண்டாங்கறே... இவகிட்ட என்ன குறை கண்டே..."

"நீயே ஒரு தடிப்பக் கட்டை. நீ என்னடா ஒருத்திக்கு வாழ்வு கொடுக்கறது."

"மன்னி, நிறுத்துங்கோ. இல்லேன்னா அசிங்கமா போயிடும்."

அவன் கைகளை ஆட்டிப் பேசினான்.

சுந்தரேசன் மனைவி ராஜம் இன்னும் கோபமானாள்.

"செருப்பு பிஞ்சிடும் நாயே. யாரைப் பார்த்து வாயை மூடச் சொல்றே. நான் பார்த்து மூக்கு ஒழுகி தின்ன பையன் நீ. இன்னிக்கு மீசை முளைச்சிட்டா பெரிய ஆளாயிடுவியா. உன் வாழ்க்கையே சோத்துக்கு ஜிங்சக்கா அடிக்கறது. நீ என்னடா வாழ்வு கொடுக்கறது."

"ராஜம், கோபப்படாத பொறுமையா இரு. அவன வாழ்வு கொடுக்கப் போறேன்னு நம்மளை தானே கேட்கறான். வாழ்வு கொடுத்தலையே, நம்ம சரின்னு சொன்னாத்தானே அவனால வாழ்வு கொடுக்க முடியும்."

சுந்தரேசன் கேலி ராமசந்திரனுக்குப் புரியவில்லை.

அண்ணா ஏதோ சமாதானமாக வருகிறார் என்று நினைத்துக் கொண்டான்.

ஆனால், சௌதாமினிக்கு அங்குள்ள எல்லா மனநிலையும் புரிந்தது. சுந்தரேசனை அர்த்த புஷ்டியுடன் பார்த்தாள். ஓரமாய் நின்று நடப்பதைக் கவனிக்கத் துவங்கினாள்.

"ஏன் சுசீலா... அவளை எத்தனை நாள் தெரியும். அவளுக்கு நீ வாழ்வு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன. அவ கேட்டு கொடுக்கறயா. இல்லை, நீயா போய் தரேன்னு

நினைவா..."

"மனசிலெ சும்மா இருக்கச் சொல்லு. தேவையில்லாம பேசறா."

"அவ அப்படித்தான் கத்துவோ. அவ வாக்கு கொடுத்திருக்காலெ... சௌதாமினி உனக்குன்னு சொல்லியிருக்காலே.. நான் சொன்னா என்ன... அவ சொன்னா என்ன. அந்த பொறுப்பு சரியா முடிக்க முடியாதோன்னு படபடத்துண்டு கத்தறா..."

"எனக்கு சௌதாமினி வேண்டாம்."

"ஏன்?"

"அவ திமிராப் பேசறா."

"உன்கிட்ட மட்டும் திமிராப் பேசறாளா... இல்லை எல்லார்கிட்டயுமா?"

"என்கிட்ட திமிராப் பேசறா. அதான் தெரியும்."

"என்கிட்ட அப்படிப் பேசறதில்லை. இந்தாத்திலே இருக்கற சின்னக் குழந்தைகிட்டகூட அவ திமிராப் பேசறதில்லை. வேலைக்காரியோ, கார் டிரைவரோ, வெளி மனுஷாளோ யார்கிட்டயும் அவ அதட்டலாப் பேசறதில்லை. உன்கிட்டப் பேசறான்னா அதுக்கு என்ன காரணம்?"

"எனக்கு இவ வேண்டாம்மா..."

"அப்படிச் சொல்லக் கூடாது ராமசந்திரா"

"அப்படித்தான் சொல்வேன். நீங்க சசிலாவைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னா நான் வெளியே போய் பண்ணிக்கறேன். அப்புறம் இந்த வீட்டுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லாம போயிடும்."

"என்ன ராமு இவ்வளவு முரட்டுத் தனமா பேசறே."

"நீங்க என்னா அவனைக் கொஞ்சிண்டு முதுகுல நாலு சாத்தாம என்ன பேசிண்டிருக்கேள். அவன் எப்படி கல்யாணம் பண்ணிப்பான். கல்யாணம் பண்ணிண்டா எப்படி நன்னா இருப்பான்?"

"நீ அனாவசியமா என் விஷயத்திலே தலையிடாதே."



ராமசந்திரன் திடுமென்று ஒருமையில் பேசத் துவங்கினான்.

ராஜம் அலறிக் கொண்டு பூஜை அறைக்கு ஓடினாள்.

வாசலில் நிழலாடிற்று.

வெற்றிலைப் போட்ட காவிப் பற்களுடன் மஞ்சள் பையுடன் அழுக்கு வேட்டியும் காவிச் சட்டையுமாய் ஒரு ஆள் படியேறி வந்தான். கும்பிட்டான்.

"யாரு..."

"நான் சசிலாவோட மாமா, மெஸ் நடத்தறேன். உங்க தம்பி இன்னிக்கு வரச்சொன்னார். மெஸ்ஸை வேறொருத்தரிடம் ஒப்படைச்சிட்டு இங்க வந்திருக்கேன். என்கிட்ட காசு பணம் இல்லை ஸ்வாமி. ஆனா நாங்களும் மானம், மரியாதை இருக்கறவாதான். நீங்க கோபப்படாத இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும். அம்மா, உள்ளே வா. பெரியவாளை நமஸ்காரம் பண்ணிக்கோ." அவர் வாசலைப் பார்த்துக் கூப்பிட்டார்.

அந்த சசிலா தஸ்ஸு புஸ்ஸு என்கிற பட்டுப் புடவையுடனும், தலை நிறைய மல்லிகைப் பூவுடனும் ஏதோ ஒரு மாதிரிப் பெண்ணாய் வீட்டுக்குள் நுழைந்தாள்.

சுந்தரேசன் தன் வாழ்க்கையில்

■ தலை நிறைய மல்லிகைப் பூவுடனும் ஏதோ ஒரு மாதிரிப் பெண்ணாய் வீட்டுக்குள் நுழைந்தாள். ■

இவ்வளவு ஆடிப்போனதேயில்லை. அவருடைய எ
வியாபாரத்திலும் இப்படி மிரட்சி ஏற்பட்டதேயில்லை
பெருமையை இழந்து விடுவோமோ என்று பயந்தார். அ
பயம் அவருக்கே வேடிக்கையாக இருந்தது.

"கல்யாணம், காப்பாத்து. சொர்ணலக்ஷ்மி, என் தம்
கையே, என்னையும் உன் குழந்தைகளையும் கூட நின்
காப்பாத்து" கண்மூடி வேண்டிக் கொண்டார்.

சுசீலாவுக்குப் பின்னால் இன்னொரு உருவம் தோன்
யது.

வாழ்க்கையில் பல மோசமான விஷயங்களை சந்தித்
சந்தித்து காய்ப்பு தட்டிப்போன முகம். அவள் இழுத்து
போர்த்திக் கொண்டாள். சுவரோரம் பதுங்கினாள்.

ராஜம் வெளியே ஓடி வந்து எல்லோரையும் வெறிக்க
பார்த்தாள்.

"நான் சுசீலாவோட அம்மா. இவன் என் தம்பி. இவ தான்
சுசீலா. ரேவதி நட்சத்திரம். வடக்கே யாத்திரிகளோடு
சமைக்கப் போன எங்காத்துக்காரர் காணாம போயிட்டார்
அவர் இருக்காரோ இல்லியோ எனக்குத் தெரியாது. அவ
இருந்தா எங்களுக்கு இந்த நிலைமை வந்திருக்காது. குழ
ந்தைகள் ஒருத்தருக்கொருத்தர் ஆசைப்பட்டுட்டா
அவாளைப் பிரிக்காம நாம சேர்த்து வைக்கணும்."

காசு இன்னிக்கு வரும். நாளைக்குப் போகும். நீங்களும்
கீழேயிருந்து மேலே வந்தவாதான். ராஜம் மாமி வந்த
வேளை நீங்க ஓஹோன்னு வரலையா. அந்த மாதிரி உங்க
தம்பியும் வந்துட்டுப் போறார்.

"என்ன ராமசந்திரன், சுசீலாவோட உனக்குப் பழக்கமா,
இந்தம்மா ஏதோ சொல்றாளே."

"நம்ம ஆபீஸ்ல தான் பழக்கம்"

"நெருக்கமாப் பழகிட்டேளா?"

"உட்கார்ந்து பேசிருக்கோம்."

"புருஷன் பொண்டாட்டியா இருந்திருக்கேளா?"



"அப்படியில்லேண்ணா."

"என்னம்மா. அவன் சொல்றது உண்மைதானா?"

"என் கையைப் புடிச்சு கல்யாணம் பண்ணிக்கறேன்னு
ருக்கார்."

"அவன் பேசிட்டா முடிஞ்சிடுத்தா. மனுஷாளுக்கு
க்கமதன்னு ஒன்னு இருக்கோன்னோ. உங்களால சீ
னத்தி எதாவது செய்ய முடியுமா. மரியாதையா ஒரு
யாணம் பண்ணி வைக்க முடியுமா?"

"நடத்துங்கோளேன். நாங்களா வேணாங்கறோம்" அந்த
ன் பல் தெரிய சிரித்தான்.

அடுத்த அரை மணியில் ராஜம் கத்த. அவள் கத்த
டில் பெருங்கூச்சல் எழுந்தது. நிலைமை மோசமா

"கல்யாணம் நடக்கலே... நான் மனுஷியா இருக்க
ட்டேன். உங்க வீட்டுப் பெண்களை ஒழுங்கா வாழ விட
ட்டேன். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் உங்க வீட்டு
சலல நின்னு கத்துவேன். நாள் கிழமைல இன்னும்
ருங்கூச்சல் போடுவேன். பெரிய இடத்து சம்பந்தம்
டைக்கறது. நாம மரியாதையா நடந்துக்கணும்னு நான்
மையா நின்னுண்டிருக்கேன். நான் ஆட ஆரம்
சேன்... இந்தத் தெரு தாங்காது."

சுசீலாவின் தாயார் புடவையை இடுப்பில் சொருகிக்
கொண்டு உரக்கப் பேசினாள்.

ராஜம் ஏதோ பேச முயல சந்தரேசன் அவளை அதட்டி
டக்கினார்.

"கோபப்படாதீங்கோ. நான் பேசறதைப் பேசியாகணு
இல்லையா... நான் கேட்கற கேள்விக்கு நீங்க பதில்
சொல்லித்தான் ஆகணும். உங்க பொண்ணுக்கு நீங்க என்ன
செய்வீங்க."

"ஒரு பத்தாயிரம் ரூபாய்ல..." அந்த மாமா ஆரம்பித்தார்.

"சும்மா இருடா. எங்க இருக்கு பத்தாயிரம் ரூபா... அப்ப

டியே இருந்தாலும் இவ
முன்னால அதை நாம வைக்க மு
யுமா? அது நமக்கு அவமானமி
லையா. சார, எல்லாம் நீங்க
தான் செய்துக்கணும். இ
அரேன்ஜ்ட் மேரேஜ் இல்லை
ஆசைப்பட்ட மேரேஜ். எங்களா
எதுவும் தர முடியாது.''

''சரி, புரியறது. நாங்க என்ன
செய்யணும்னு நினைக்கறீங்
அதாவது நாங்க உங்
பெண்ணுக்கு என்ன
பண்ணணும்.''

''ஒரு பத்துப் பவுன்ல நகை
போட்டு'' அந்த மாமன் ஆரம்பிக்
அந்த அம்மாள் இடைமறித்தாள்.

''என்ன பத்துப் பவுன்ல நகை
இருபது பவுன் போட்டா எங்
உடம்பு தாங்காதா. ஒரு காலத்து
நானும் எழுபது பவுன் நகை
போட்டுட்டிருந்தவதான். நீங்க
நினைச்சா போட முடியாதா
என்ன...''

''மேற்கொண்டு...''

''மேற்கொண்டு என்ன...
புடவை, பாத்திரம், கட்டில், பீரோ,
கேஸ் அடுப்பு. ஒரு தனிக்குடித்த
னத்துக்கு என்ன உண்டோ அத்
தனை சாமானும் வேணும். உங்க
தம்பிக்குத் தானே பண்றேன்?''

''ஏன் தனிக்குடித்தனம். இங்
கயே வந்துடட்டுமே?''

■

''இது
அரேன்ஜ்ட்
மேரேஜ்
இல்லை.
ஆசைப்பட்ட
மேரேஜ்.
எங்களால
எதுவும்...''

■



பாலகுமாரன்





"அப்புறம் நான் எங்கே போறது?" அந்த அம்மாள் ரக்கக் கேட்டாள்.

"அட... அது ஒன்னு இருக்கே..."

"உங்க தம்பி துணையோட நீங்க உசந்து வளர்ந்தேள். தனால அவருக்குத் துணையா நீங்க தனிக் கடை ன்னு போட்டுத் தானும், அவரையும் உசத்தனும்."

"எனக்கும் அப்படி ஒரு ஐடியா இருக்கு."

"உங்கக்கா பொண்கள் இங்க இருக்காமே."

"ஆமா, இவா ரெண்டு பேரும்தான்."

"இவங்க இங்க இருக்கறால தான் நாங்க தனிக் குடித் தனம் போறோம். நெருப்பையும் பஞ்சையும் பக்கத்துல பக்கத்துல வைக்கலாமா?"

"அது ரைட். வைச்ச தான் ஒன்னு பத்திண்டுத்தே. நீங்க தனிக் குடித்தனம் போறது தான் ரைட். நீங்க நேக்கற சீர் செய்யத்தான் வேணும். ஆனா என்னங்கறது அப்புறம் சொல்றேன். அதுக்கு முன்னாடி ஒரு விஷயம். காஞ்சிபுரத்துக்குப் போய் பாலசுப்ரமணியம்னு ஒரு நாடி ஜோஸ்யர் இருக்கார். அவர்கிட்டப் போய் நாடி ஜோஸ்யம் பார்க்கனும்."

"அந்த பாலசுப்ரமணியம் என்னுடைய நண்பர். இன்னிக்கு ஒரு நல்ல நிலைமைல நான் இருக்கேன்னா அதுக்கு அவரோட நாடி ஜோஸ்யம் தான் காரணம்."

"எப்படி...?" அந்த மாமன் ஆவலோடு கேட்டார்.

"நாடில என்னைப் பத்தி விவரங்கள் தெரிஞ்சு, நான் செய்ய வேண்டிய பரிகாரங்கள் எல்லாம் கேட்டு தெரிஞ்சுண்டு ஒரு பரிகாரம் விடாம பண்ணினேன். உனக்கு எத்தனை வயசோ அத்தனை விளக்கு ஸ்ரீரங்கத்துல ஏத்த சொல்லி வந்தது. ஏத்தின மூணாம் நாள்லேர்ந்து நான் அமோகமா வளர்ந்துண்டிருக்கேன். அதேவிதமா தஞ்சாவூர்ல இருக்கற எல்லா சிவாலயங்க ளுக்கும் மாலை போட்டு அர்ச்சனை பண்ணினேன். திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலுக்கு ஆறு குடம் பால்

அபிஷேகத்துக்குக் கொடுத்தேன். இரு நூத்தம்பது பேருக்கு ஸ்வாமி மலையில் அன்னதானம் பண்ணேன். என் எல்லா கஷ்டங்களும் துடைச்சா மாதிரி போயிடுத்து.

''நான் நூறு ரூபாய்க்குக் கஷ்டப்பட்டிருக்கேம்மா, இன்னிக்கு எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை.''

''முன்ன எது பேசினாலும் தப்பா வரும். சௌக்கியமான்னு கேட்டா கூட அடிக்க வருவாள். இன்னிக்கு கோச்சண்டா கூட காலைத் தொட்டு கும்பிட்டுப் போறான்.''

''அந்த பாலசுப்ரமணியம் இன்னிக்கும் ஏதாவது பிரச்சனைன்னா எனக்காக நேரம் ஒதுக்கி தனியே நாடி ஜோஸ்யம் பார்ப்பார். என் அக்காவுக்கு நாடி ஜோஸ்யம் ரெண்டு தடவை பார்க்கறதுக்கு முயற்சி பண்ணினோம். ஒரு தடவை ஏடு கிடைக்கலை. இன்னொரு தடவை அடுத்த வருஷம் பாரு வந்துடுத்து. அடுத்த வருஷம் பார்க்கறதுக்கு அவ இல்லை. அதனால எனக்கு நாடி ஜோஸ்யத்து மேல ரொம்ப நம்பிக்கை.

''நாடி ஜோஸ்யம் என்ன சொல்றதோ அதான் என் வாழ்க்கை. நாடி ஜோஸ்யம் கல்யாணம் பண்ணுன்னா உடனே முடிச்சுருவேன். கூடாதுன்னா யார் முயற்சி பண்ணாலும் தடுப்பேன்.

''என்னா... கல்யாணங்கறது மனுஷா முடிவு பண்றது இல்லை. உங்க சுசீலா தான் எங்க வீட்டு மருமகள்னு எழுதியிருந்தா அதை தடுக்க என்னால முடியாது. இதான் என் நிலைமை நீங்க என்ன சொல்றேள்.''

வீடு நிசப்தமாகியது.

ராஜும் ஏதோ பேசத் துவங்க சுந்தரேசன் திரும்பி அவளை முறைத்தார்.

அவள் மறுபடி வாய் திறக்க சௌதாமினி அவளை படுக்கையறைக்குத் தள்ளிக் கொண்டு போனாள்.

''என்னடி இது அநியாயம். நீ இருக்கும்போதே அவளுக்குக் கொடுத்துருவார் போல இருக்கே.''



''மாமா அப்படி பண்ணமாட்டார். அவர் ஏதோ வேற திட்டம் போடறார். மாமா நிதானத்தைப் பார்த்தாலே எனக்குப் புரியலையா''

''இதுல என்னடி நிதானம் வேண்டிக்கிடக்கு. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சன்னா உங்கம்மா சாபம் என்னை சுட்டெரிச்சுடும்டி.''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. இந்தப் பாட்டி ரொம்ப மோசமான பாட்டி இவக்கிட்ட சண்டை போட்டு ஜெயிக்க முடியாது. நம்ம சூழ்ச்சிதான் சேறாகும். இதை நகர்த்தறதுதான் நல்லது. மாமா தப்பு பண்ண மாட்டார்.''

''தப்பு உம்பேர்ல இருக்குடி. நீ ராமுவை ரொம்ப நோகடிச்சுட்டே. ஒரு வயசுல ஆம்பளைகள் அசடா இருக்கறது சகஜம். அலட்டலா இருக்கறது ஒரு சுபாவம். அதுக்குப் போய் அவனை வாடா போடான்னு பேசணுமா. மக்குங்கற மாதிரி நடத்தணுமா.''

''தப்பு தான் மாமி. எனக்கும் போறலை. என்னை நான் பெரிய இன்டலக்சுவல், இன்டலிஜென்ட்டுன்னு நினைச்சுண்டேன். வீட்டுல இருக்கற ஆளோடையே அனுசரணையாப் போகாத நான் வெளியே இருந்து வர்ற ஆளோட எப்படி அனுசரணையா நடந்துப்பேன். அலட்டறது ரொம்ப சுலபம்னு தெரிஞ்சு போயிடுத்து. ஆனா வாழ்க்கை ரொம்ப கஷ்டம். பெரிய ரிஸ்க்.

ராமு மாமாவை கெட்டிக்காரனா மாத்த முடியும். அதைத்தான் நான் செஞ்சிருக்கணும். செய்யாதது என் தப்பு. அதனால தான் தப்புத் தப்பா யாரோ வந்து இங்கே நிக்கறா.

நான் ராமுவைக் கல்யாணம் பண்ணிக்கறேனோ இல்லையோ, இந்தப் பொம்மனாட்டி கல்யாணம் பண்ணிண்டா இந்த வீடு நாறிப் போயிடும். நம்ம குடும்பம் சிதறிப் போயிடும். இவ வேற. நாம வேற. இவ உள்ளே வரக்கூடாது. அதுக்கு சண்டை போட்டா முடியாது.''

''அம்மா, எனக்கு உதவி செய். அம்மா, எனக்கு உதவி செய். வெறும் திமிர். குடும்பத்துக்கு உதவாது. எனக்குப் புரிஞ்சு போயிடுத்து. எனக்கு உதவி செய்.''

அவளை கைகூப்பி கண்ணீர் விட்டு அழுதாள்.

அழுகிற பெண்ணை ராஜ... அணைத்துக் கொண்டாள்.

"ராமசந்திரன் நல்லவன் தான்டி. நாம எல்லாரும் சேர்ந்து அவனை அலட்சிப்படுத்திட்டோம். அவனோட அண்ணா உயரமா இருக்கறதால அவனை மட்டமா நினைச்சுட்டோம். கவலையேபடாதே. உங்கம்மா காப்பாத்துவோ சொர்ணலக்ஷ்மி நிச்சயம் காப்பாத்துவோ."

"அப்ப நான் வீட்டுக்குப் போயிட்டு வரேங்க."

"எங்க போறது நாளைக் கார்த்தால ஆறு மணிக்கு காஞ்சிபுரம் கிளம்பறோம். ஏழரை மணிக்கு நாடி பார்க்கிறோம். நாடி சரின்னா சசிகலா தான் இந்த வீட்டு மருமகள். எழுபது பவுன் தானே கேட்டேன். நான் நூறு பவுன் போடறேன். நான் கூட கொடுக்கற முப்பது பவுன் உங்கக் கழுத்துல இருக்கட்டும். ஆனா, நாடில சரியில்லைன்னு வந்தது... அந்த ஈஸ்வரனே வந்தாலும் இந்தக் கல்யாணத்தை நடத்தவிடமாட்டேன். இதுதான் என்னோட, முதல், கடைசி கண்டிஷன்."

"சார், எனக்கு ஒரு அரைப் பவுன்ல மோதிரம் போடுங்கோ சார். நான்தானே நின்னு நடத்தி வைக்கணும்."

■

**அந்த ஈஸ்வரனே வந்தாலும் இந்தக் கல்யாணத்தை நடத்தவிட மாட்டேன். இதுதான் என்னோட**

■



"ஒரு பவுன்ல போடறேன். பட்டுவேட்டி கட்டிக்கீரா... ஒரு ஜோடி வாங்கித் தரேன்."

"வீட்டுல இருக்கறவாளுக்கும் டிரஸ் வேணும் சார்."

"ஜமாய்ச்சுடலாம் கவலையே வேண்டாம். உங்க அக்கா ...ள் கண்டிஷனுக்கு ஒத்துக்குவாளா."

"என்னக்கா... ஒத்துக்குவோமேன். நம்மை விட நாடி முக்கியமில்லையா. நீயும் தான் கூட இருக்கப் போறயே."

"இவ்வளவு தூரம் வந்த பிறகு நாடி தப்பு சொல்லா...தென்று நினைக்கிறேன். நாளைக்குக் கார்த்தால ஆறு மணிக்குக் கிளம்பறோம். ஏழரைக்கு நாடி கேட்கறோம்."

அந்தம்மாள் புரியாது தலையாட்டினாள்.

நல்லதோர் பொதிகை மலையில், வல்லமையாய் மந்திரம் சொல்லி, அல்லதும் உள்ளதும் எல்லாம் பலமுறை சோதனை செய்து மெய்யலே உரைக்க வந்தேன். நந்தி நம் பெருமான் வாழ்க."

அகத்தியர் என்ற நாமம் அடியேனுக்குத் தந்த ஈசன் முகத்தினில் உலவ வைத்தான். சீர் தூக்கிப் பார்க்குமாறே."

முகத்தினில் ரேகை பார்த்து முன் நெற்றிச் சுருக்கம் பார்த்து அகத்தின் அழகு சொல்வேன். அன்பான ஈசன் சொல்வான்."

நகத்தினில் நிறங்கள் காட்டும் நல்லதோர் உடம்பு ரோகம், சுகத்தினை விதியைச் சொல்ல உள்ளங்கை ரேகை போதும்."

ஆயுளை உச்சி சொல்லும். குணத்தினை இமைகள் சொல்லும். கழுத்து தான் நேர்மைக்கு அறிகுறி முதுகுதான் செல்வம், ஆளுமை எல்லாம் மாது தயை காட்டும். முன் வயிறு போகம் சொல்லும். பிருஷ்டங்கள் வலிவைக் காட்டும். தொடை இரண்டும் செயல்திறன் சொல்லும். முழங்கால்கள் பயணம் பகர கணுக்கால்கள் பாதம் விரல்கள் முன் வினையைச் சொல்லுமாமே."

அங்கங்கள் வகையை வைத்து மனிதரைப் பிரித்துப் போட்டு அவரவர் பிரிந்த சுழலில் விதி தன்னை வகுத்துப்

பார்த்து இவ்வோலை எழுதி வைத்தேன். எடுப்ப
படிப்பராக...

கார்த்திகை சோமவாரம் மணப் பொருத்தம் தேடி வந்
ளீர்கள். சரியா, தவறா உறவு... செய்வதா திருமணம் அ
மறுப்பதா என்று குழம்பி என் நண்பன் வழியைச் சொ
அகத்தியனாம் என்னைத் தேடி அதிகாலை வந்துள்ளீ

நீர் இங்கு வருவீர் என்று இவ்வோலை எழு
வைத்தோம்.

தாயும், தாய் மாமனும், பெண்ணும் அதிசயப்பட்
வாய்பிளந்து உட்கார்ந்திருந்தார்கள்.

பெண்ணுக்கு வேலை அந்தத் தட்டச்சுப் பொறி
தானே. வரன் தேடி வந்த அந்த ஆளுக்குத் தரகன் வேலை

மூவரும் அதிசயத்தில் கை தட்டினார்கள்.

மனம் ஒத்துப் போயிற்றம்மா. இருவரும் பேசிப் பார்
ஆயினும், நாடி பார்ப்போம். அகத்தியன் வாக்கே இற
அந்த ஈசனுக்கும் இவன்தான் எழுத்து. பார்
திருமணமும் இவனால் நடக்க இங்கு வந்த சம்பந்தத்
இனிமேல் நாம் சோதனை செய்வோம்.

சுந்தரேசன் மனைவி ராஜம் உட்பட ராமசந்திர
உட்பட மிகக் கவனமாய் அந்த ஓலை படிக்கக் கேட்டார்க

ஈஸ்வரனை சாட்டி வைத்து சத்தியத்தைச் சொல்
கிறேன். ஆகாது இந்தக் கடிமணம் ஆனாலும் தொல்லை
யம்மா. பெண்ணுடைய ஆத்தாளுக்கு பெரும் வியா
கண்டம் உண்டாம். மாப்பிள்ளை வந்த வேளை ம
நடுவே வலியும் தோன்றும். கண் மீது தூசு அப்பு
கசக்கினால் நோயாய் மாறும். பல் வலி, காது குடைச்ச
முதுகெலும்புப் பொடி பொடியாதல், மூலம், பவுத்திர
வாயு மெல்ல மெல்ல சேருமம்மா. தாய் மாமன் ரோகின
சுடரா. தட்டுத் தட்டாய் அன்னம் விற்பான். அவனுக்கு
கண்டம் உண்டு. நடுத்தெருவைக் கடக்கும்போது
குதிரையில்லா வண்டி மோதி மூன்று திங்கள் மருத்துவ
வாசம். முடிவினில் மரணம் தானே.''

''அம்மா, மன்னிச்சுக்கங்க நாடி சரியா வரலை



மேற்கொண்டு படிக்கட்டுமா வேண்டாமா.''

அவர்கள் மௌனமாய் இருந்தார்கள். சுந்தரேசன்
உற்சாகப்படுத்தினார்.

''படிங்க, வந்துட்டோமில்ல. மொத்தமா கேட்டுரலாம்.''

''ஆறேழு திங்கள் போக பெண் நிச்சயம் விதவை
யாவாள். தாரமாய் ஏற்ற இளைஞன் தவறுவான்.
தலையடிபட்டு ஆகாது அப்பா இந்தக் கடிமணம் நல்ல
தல்ல. போகாத ஊருக்கு வழியேதும் சொல்லலாமோ.''

மாகாதை உலக வாழ்க்கை. என் ஓலை எல்லாம்
சொல்லும். சாகாத சொல்லை உடைய அகத்தியன் சொல்லி
விட்டேன்.

அந்த அம்மாள் சுசீலாவின் தாயார் எழுந்து நின்றாள்.

''எங்கே எழுதியிருக்கு காமி. ஓலையை எட்டிப்
பார்த்தாள்.''

ஓலை வாசித்த சுப்ரமணியம் பூதக் கண்ணாடியை வர
வழைத்து அந்த எழுத்துக்களைப் படித்துக் காட்ட அந்த
மூவர் கூட்டம் இடி விழுந்ததுபோல அமர்ந்திருந்தது.

''எங்க சுப்ரமணியம், பரிகாரக் கண்டம் ஏதாவது
உண்டா.'' சுந்தரேசன் கேட்டார்.

''கூடவே கூடாதுன்றாங்க. பரிகாரக் கண்டம்
கேக்கறீங்களே.''

''பரவாயில்லை படிங்க, ஏதாவது தோஷ நிவர்த்தி
இருக்கா. அதுக்குப் பிறகு கல்யாணம் பண்ணலாமா.''

''ஆகாது என்று அழுத்தமாய் சொல்லிய பிறகும்
வேகமாய் பரிகாரம் கேட்டு வந்த சிறியோனே, கேளப்பா.''

''இடப்பக்க நடுமார் மீது மச்சமுள்ள அந்தப் பெண்ணை
சீலையைப் பின்னால் வைத்து சுகத்தை முன்னால்
வைத்த மடமங்கை நிலையைச் சொன்னால் மறுபடி
கேள்வி உண்டா.''

வம்படியாய் கேட்டதாலே ஓர் வழி உனக்கு சொல்லு
கின்றேன். பித்தளை பாத்திரங்கள், இரும்பினில் மெருகு
ஏற்றி செய்ததோர் வீட்டுப் பொருட்கள் தங்கத்தில்

திருமாங்கல்யம் கைவளை பே
ரங்கள் வீட்டுக்கு வந்தப் பெ
ணிடம் விருப்பத்துடன் கொடு
னுப்பு. அவள் திருமணம் தெற்
நடக்கும்.

"இன்னும் வினயமா
கணவன் கிடைப்பான். காத்
டுவான், கந்தன் அவளை தாயோ
மாமன் மகிழ ஆறாவது திங்க
அந்தக் குலப் பெண்ண
திருமணம் நடக்கும்."

உன் தம்பி பேச வேண்டா
பேசினால் ஆயுசு குறையும்.

"பெண் பாவம் இல்லா உந்த
வீட்டினில் வம்பு வேண்டா
கண்பட்ட கோலம் இந்தக் க
மணம் நடக்க வேண்டா
புண்பட்ட வார்த்தையேது
பேசாதே. நாவு காப்பாய். எ
வார்த்தை சத்தியம் அப்பா. எப்பே
தும் உண்மை சொல்வேன்."

"எதுக்காக அவளுக்கு கா
தர்றது" ராஜம் மறுபடி சீறினாள்.

"சும்மா இரு. நாடி என்
சொல்லித்தோ அதை நிச்சயமா
நான் செய்வேன். யார் தடுத்தாலு
செய்வேன்.

என்னம்மா... என்ன சொல்றீங்
இந்தக் கல்யாணம் நடத்தலாமா,
வேண்டாம்னு வருதே."

"மீறி செய்யறவங்களும் இருக்
காங்களே" சுந்தரேசன் சொன்னார்.

"வேண்டாம்... நான் செத்துப்

■
**வீட்டுக்கு வந்தப் பெண்ணிடம் விருப்பத்துடன் கொடுத்தனுப்பு. அவள் திருமணம்**
■



போயிடுவேன்னு வர்றதே. ஆனா மார் வலிக்கறது
ண்மை. அவ பேரு. அவ மாமா நட்சத்திரம் எல்லாம்
றது, எப்படி பொய்யா இருக்கமுடியும்."

"அப்ப கிளம்பிடலாமா."

"அது என்னமோ பரிகாரம்னு வர்றது. வளையல்,
ங்கிலி, மோதிரம்..."

"நீங்க வீட்டுக்குப் போங்க, பின்னாடியே
அனுப்பறேன். சுப்ரமணியம் இந்தாங்க" சுந்தரேசன் சில
று ரூபாய்களைக் கவரில் போட்டு மேஜையில்
வைத்தார்.

சுந்தரேசனின் சுமோ எல்லோரையும் சுமந்து கொண்டு
பண்ணைக்கு திரும்பியது.

தம்பியை மடத்துக்கு அருகே இறக்கி இரண்டு பழைய
வண்டிகளைப் பேரம் பேசிவிட்டு வரச் சொன்னார்.

மறுநாளே ஒரு நம்பிக்கையான ஆளை சுசீலாவின்
வீட்டுக்கு அனுப்பி ஐந்தாயிரம் ரூபாய்க்கு பித்தளை, எவர்
சில்வர் பாத்திரங்கள் வாங்கச் சொன்னார். வளையல்,
சங்கிலி, மோதிரம், திருமாங்கல்யமும் அனுப்பி வைத்தார்.

"வேற இடத்துல வேலை பார்த்துக்கம்மா" தீபாவளி
போனஸோடு கணக்கு தீர்த்துக் கொடுத்தார்.

நல்ல நாள் பார்த்து, நேரம் பார்த்து வீட்டுக்குள்ளயே
தம்பிக்கு சௌதாமினியைத் திருமணம் செய்து வைத்தார்.

"நான் எதாவது தப்பு பண்ணியிருந்தா மன்னிச்சுக்கோங்
அண்ணா."

"ஒரு தப்பும் பண்ணலை. கேரளால ஏழு அம்பாசிடர்
இருக்காம். ஒரே இடத்துல விலை பேசி கொண்டு வா நீ
போறயா. இல்லை, நான் போகட்டுமா."

"நான் போறேண்ணா."

"வெரிகுட். கூட சௌதாமினியைக் கூட்டிண்டு
போ. நிதானமா பேசி முடி. நாம தரகர்கள். நாம ரெண்டு
பேர்க்கு நடுவுல இருக்கறவா தராசு முள்ளு தானா
ஆடலாமா, எடையேத்தினா தான் ஆடலாம். நாம கனமான

விஷயம் தான் பேசணும். கனமாதான் நடந்துக்கணும்.

"சௌதாமினி எல்லா ஆம்பளைக்கும் ஒரு அசட்டு கம்பீரம் உண்டு. ஆம்பளை எப்பவுமே அலட்டல் ... அது அவனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. ரத்தத்தி ஊறினது. பெரிசா எடுத்துக்காதே. ஆபத்து உதவி பண்ணிட்டு அப்புறம் இடிக்கக் காமி.

ஒருநாளும் பிரச்சனை நேரத்தில புருஷனை விட்டுட்டு வராதே. நீ பிரச்சனையாகாதே. நா ஒருநாள் வெளியூர் போயிட்டு வரேன்."

சுந்தரேசன் கார் சாவியை எடுத்துக் கொண்டு வாச நோக்கிப் போனார்.

சௌதாமினி அவருக்கு குடிக்க ஜலம் கொண் வந்து கொடுத்தாள். காலி டம்ளரை வாங்கிக் கொண்டா

"காஞ்சிபுரத்துக்குப் போனா காமாட்சி அம்மன்கிட் எனக்காகவும் வேண்டிக் கோங்கோ. ரகசியமா பேசினாள்.

சுந்தரேசன் சிரித்தார். சரி என்றார். இரண்டு ம நேரத்தில் அவர் கார் காஞ்சிபுரத்தில் இருந்தது.

"சுப்ரமணியம், எனக்கு நீ பண்ணின உதவிக் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. அந்த குடும்பத்தோட சம்பந்தம் நடந்திருந்தா. என் வாழ்க்கை அழிஞ்சு போயிருக்கும். நான் என் தம்பி கல்யாணத்தை...

இரு... இரு சுந்தரேசா" பாலசுப்ரமணியம் சட்டென் ஒரு ஓலையை எடுத்துப் பிரித்துப் படித்தார்.

ஆறாக ஓடிய வாழ்க்கை சேறாக சில நாள் ஆச வீராப்பாய் இரண்டு பெண்கள் விபரீதக் கணக்கு போ கூறாகித் தவித்தாய் மனமே. ஒரு நரித்தனம் செய்தது நிஜமே. போனவள் வந்து காத்தா உன் பேச்சினில் தெளிவு செய்தாள்.

கோணாத கார்த்திகை கடைசி முகூர்த்தத்தில் திருமணம் முடித்தாய். நாணாத பெண்ணோடு புத் நலம் சிறிது குறைந்த சோதரனை சேர்த்து வைத்தாய்.



■

**தீபத்தைக்
காப்பதற்காய்,
மேற்தளத்தை
மூடல்
போலே
காபந்தாய்
நடந்து
கொண்டாய்,**

■



ளோர் கூடி களிக்கும் கோலம் இல்லாமல் தவிர்த்து விட்டாய். காளைக்குப் பசுவைப் போல, யானைக்குப் பிடியைப் போல, குரங்குக்கு மந்திபோல உன் சகோதரன் கூடி வாழ்வான். உன் சாயலாய் அவனும் வளர்வான்.

ஆபத்துக் காலம் வந்தால் சொல்லில் தோஷம் இல்லை. சாபத்தை ஏற்கவில்லை. பாபத்தை சேர்க்கவில்லை. தீபத்தைக் காப்பதற்காய், மேற்தளத்தை மூடல் போலே காபந்தாய் நடந்து கொண்டாய்.

இதை அகத்தியன் எழுதி வைத்தேன்.

"கடைசி முகூர்த்தத்துல உன் தம்பி கல்யாணம் முடிஞ்சு போச்சு. எனக்குக் கூட நீ சொல்லலை சரியா..."

"ஆமா... பாலசுப்ரமணியம்"

"ஆனா, நாடி பொய்யில்லை சுந்தரேசா நீ திருட்டுத்தனம் இதுல எழுதியிருக்கு. நரித்தனம் பண்ணுவேன்னு ஏற்கனவே சொல்லியிருக்காங்க. மேற்கொண்டு படிக்கட்டுமா."

"இரு. ஒரு போன் பண்ணிக்கறேன்" சுந்தரேசன் சென்னைக்கு போன் செய்தார்.

ராமசந்திரனையும், சௌதாமினியையும் காஞ்சிபுரம் வரச் சொன்னார்.

"என்னப்பா அவங்களை வரச் சொல்றியா. இந்த இதைப் படிச்சிட்டிரு" நாடி ஓலையை அவனிடம் கொடுத்துவிட்டு பாலசுப்ரமணியம் வீட்டுக்குள் போனார்.

"புதுவேட்டி சட்டை, புடவை வாங்கணும், கடைக்கு போறீங்க."

தொலைவிலே சுப்ரமணியத்தின் குரல் கேட்டது.

திருப்பதில் நல்ல காரரய் எடுத்துக் கொண்டு ராமசந்திரனும், சௌதாமினியும் வீட்டை விட்டு காஞ்சிபுரம் நோக்கி கிளம்பினார்கள்.

"உனக்கு டேப் ஜோசியம் தெரியுமா" ராமசந்திரன் கேட்டான்.

"தெரியாதே அப்பமன்னா."

"முதமுதல்ல நீயும் நானும் சேர்ந்து ஒரு பாட்டு கேக்கப் போறோம். இந்தக் காரை நான் இப்பத்தான் தொடறேன். இந்தக் காருக்குள்ள டெக் இருக்கு. டெக்குக்குள்ள கேசட் இருக்கு. வண்டியை ஸ்டார்ட் பண்ணிட்டு டெக் ஆன் பண்றேன். பாட்டு வருதே அதான நம்ம வாழ்க்கை. அப்படிதான் நம்ம விதி. ஆன் பண்ணட்டுமா."

"கடவுளே... ஏதாவது தப்பா வரப்போறது" சௌதாமினி சிணுங்கினாள்.

"ஆன் பண்ணட்டுமா" அவன் மறுபடி கேட்டான்.

அவள் தலையசைத்தாள். அவன் குமிழ் அழுத்தினான். விளக்கெரிந்தது. நாடா சுழன்றது.

**"அன்புள்ள மான் விழியே**
**ஆசையில் ஓர் கடிதம்..."**

பாட்டு ஒலித்தது.

அவள் நிம்மதியானாள்.

**- முற்றும் -**



பாலகுமாரன்

# என்ன செய்தார் ரஜினி..?

## ரசிகர்கள் சொல்கிறார்கள்

ஆர். சத்தியமூர்த்தி

தமிழகத்தின் விடிவெள்ளி சூப்பர்ஸ்டார். தமிழக மக்களின் பணத்தை கொள்ளையடித்தும், எதிர்த்தோரை சவுக்கால் அடியாட்களை கொண்டு கொடுமைப்படுத்தியும், தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் கோடி கோடியாக சுருட்டியவர்களும் இந்த நாட்டில் நடக்கக் கேட்க துணிவில்லாத நேரத்தில் படைத்த தலைவருக்குப் பிறகு அவருடைய



வழியில் மக்களின் இதயங்களில் குடிகொண்ட சூப்பர்ஸ்டார் அவர்கள் தமிழக மக்களின் குறைகளைப் போக்க துணிவுடன் ஒரு அறிக்கையின் மூலமாகவே கொடியவர்களின் ஆட்சியை ஒழித்ததில்

